தென்றல்

விலை 16 புதியகாசுகள்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6

மலர் 5 | சென்னை | 2-8-58 | சனிக்கிழமை | இதழ் 7

எழுச்சியும் வீழ்ச்சியும்!

உலக யுத்தத்தினால் ஏற்பட்ட விளைவுகளை அனுபவித்த உலக மக்கள், மீண்டும் ஓர் யுத்தம் ஏற்பட்டால் மனித இனமே பூண்டோடு அழிந்துவிடும் அளவுக்கு பயங்கர ஆயுதங்கள் கண்டு பிடிக்கப்பட்டிருப்பதால் அனை வரும் யுத்தம் ஏற்படுவதை விரும்பவில்லை. ஆனாலும் உலக யுத்தம் மூளுவதற்கான சூழ்நிலைகள் உருவாவதும் பின் அவை தவிர்க்கப்படுவதுமான நிகழ்ச்சிகள் இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிறகு அடிக்கடி நிகழ்ந்த வண்ணமாகவே இருக்கின்றன.

இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிறகு அமெரிக்க கோஷ்டி வல்லரசுகளுக்கும்ரஷ்ய வல்லரசுக்கும் ஏற்பட்ட தகராறுகள் பலப்பலவாகும். இரண்டாவது உலகப்போருக்குப் பிறகு ஏகாதிபத்தியப்பிடிப்பில் இருந்து விடுதலைபெற ஒவ்வொரு நாட்டு மக்களும் விடுதலை வேட்கை கொண்டிருந்தனர். மக்களின் விடுதலை வேட்கையை ஆதரிக்கவும், எதிர்க்கவுமாக வல்லரசுக் கோஷ்டிகள் முளைத்தன.

ஜெர்மனி உனக்கா? எனக்கா? என்ற பிரச்சனையில் அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் ஏற்பட்ட தகராறு மீண்டும் ஓர் உலக யுத்தத்தை உண்டாக்கக்கூடும் என்ற நிலைமை ஏற்பட்டு பின் கிழக்கு ஜெர்மனி, மேற்கு ஜெர்மனி என்று பங்கு போட்ட பிறகு தான் யுத்தம் தவிர்க்கப்பட்டது.

சீனாவில் ஏற்பட்ட புரட்சி வெற்றிகரமாக முடிவுபெற்று புதிய சீனத்தையும் உருவாக்கிற்று. அடுத்து வியட்நாமிலே டாக்டர் ஹோசி-மின் தலைமையில் புரட்சி ஏற்பட்டு அதுவும் வெற்றிகரமாக முடிவுபெற்றது. முன் நடைபெற்ற புரட்சிகளில் வல்லரசுகள் நேரடியாக ஈடுபடவில்லை. ஆனால் கொரியாவில் ஏற்பட்ட யுத்தம் இரண்டு கோஷ்டி வல்லரசுகளையும் ஈடுபட வைத்து உலக யுத்தத்திற்கு வித்திட்டது. ஆனால் இரண்டு தரப்பாருக்கும் அடைந்த நாசத்திற்குப் பிறகு ஐக்கிய நாட்டுச் சபையின் நடவடிக்கைக்குப் பணிந்ததால் யுத்தம் தவிர்க்கப்பட்டது.

சூயஸ்கால்வாய் தேசிய மயமாக்கப்பட்டதால் பிரிட்டனுக்கு ஏற்பட்ட அவமதிப்பை இஸ்ரேலைப் பயன்படுத்தி வஞ்சம் தீர்த்துக்கொள்ள எகிப்துமீது போர் தொடுக்கப்பட்டது. பிரிட்டன் இதில் தோல்வியை

முசாதிக் மூட்டிய தீ!

அணைத்துக் கொண்ட பிறகு போர் தவிர்க்கப்பட்டது.

ரஷ்ய ஏகாதிபத்தியத்திற்கு அங்கேரியில் மக்கள் புரட்சியும்; இந்தோனேஷியாவில் மக்கள் புரட்சியும் போன்ற தோல்வி அடைந்த சம்பவங்களும் நிகழ்ந்தன.

அல்ஜீரியா, சைப்ரஸ் தீவு, லெபனன் முதலிய நாடுகளில் மக்கள் புரட்சிசெய்து வருகின்றனர். மக்கள் புரட்சி செய்து நாட்டை விடுதலைபெறச் செய்வதில் ஏற்படும் கஷ்டம் ராணுவப் புரட்சியில் அவ்வளவாக இல்லை என்பது சமீபத்தில் நடைபெற்ற சில சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

இதற்கு உதாரணமாக எகிப்திலும் ஈராக்கிலும் ராணுவப் புரட்சிமூலம் இரத்தம் சிந்தாமல் கைப்பற்றியிருக்கின்றனர். இதனையொட்டி மத்யக்கிழக்கில் ஏற்பட்டிருக்கும் கொந்தளிப்பும், குழப்பமும் உலக யுத்தத்திற்கு அறிகுறியாகவே காணுகின்றன.

இரான், இராக், ஜோர்தான், துருக்கி போன்ற மத்தியக்கிழக்கு நாடுகள் பெரும்பாலும் பாலைவனப் பிரதேசம் என்றாலும் மேற்கத்திய வல்லரசுகள் இரு நாடுகளில் அதிக அக்கரை காட்டுவதின் நோக்கம் உலகத்திலேயே கிடைக்கும் பெட்ரோலியத்தில் பெரும்பகுதி இரு நாடுகளில் இருந்துதான் கிடைக்கின்றன. ஆகவே இவைகளை இழந்துவிட மேற்கத்திய வல்லரசுகளுக்கு மனமில்லை. அதன் பொருட்டே அமெரிக்காவும் பிரிட்டனும் இதுவரை எந்த நாட்டுக்கும் அனுப்பாத அளவு ராணுவத்தை மத்தியக்கிழக்கில் உலவ விட்டாவது மத்தியக் கிழக்கை காப்பாற்ற எண்ணியுள்ளது. இதன் விளைவு என்ன ஆகுமோ என்று உலகம் கவலையுடன் நோக்கிக்கொண்டிருக்கிறது.

மத்தியக்கிழக்கில் எண்ணெய் வயல்களை பெரும்பாலும் பிரிட்டன் இயக்குவதால் கோடிக் கணக்கான டாலர் பிரிட்டனுக்கு கிடைக்கிறது. இந்நாடுகளில் உள்ள மன்னர்கள் பிரிட்டனின் செல்லப்பிள்ளையாக இருப்பதால் இந்நாடுகளின் பொருளாதாரத்தை சுரண்டிக் கொழுத்து வருகிறது. ஆனல் இந்நாடுகளில் மக்கள் தங்கள் நாடு அந்நியரால் சுரண்டப்படுவதை உணர்ந்து இனியும் எங்கள் பொருளாதாரத்தை அந்நியர்கள் சுரண்டிக் கொழுக்க விடமாட்டோம் என்று புரட்சி செய்கின்றனர்.

மத்தியக் கிழக்கு நாடுகளில் இத்தகைய ஏகாதிபத்திய எதிர்ப்புணர்ச்சி இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பிறகு கடந்த ஆண்டுகளுக்குமுன் பாரசீகத்தில் முதுபெரும் கிழவர், டாக்டர் முசாதிக்கினுல் உண்டாக்கப்பட்டது. ஆங்கிலோ-இரானிய எண்ணெய் வயல்களை பிரிட்டனிடமிருந்து கைப்பற்றி தேசிய மயமாக்கினர். அதோடு மன்னராட்சிக்கும் முற்றுப்புள்ளி வைக்க நினைத்தார். ஆனல் அவருக்கு அதில் தோல்வி ஏற்பட்டதால் ஈரான் ராணுவக் கோர்ட்டினுல் 3 வருடம் சிறை தண்டனை விதிக்கப்பட்டார். அவருடைய கனவு தன் நாட்டில் நிறைவேருவிட்டாலும் அவர் காலத்திலேயே அண்டை நாடுகளில் நடப்பதை கண்டுகொண்டுதான் இருக்கிருர்.

முசாதிக்குப் பிறகு எகிப்தில் நாசரும், நகிபும் மன்னராட்சியை ஒழித்தனர். கடந்த 2 வருடங்களுக்குமுன் உலக முக்கியத்துவம் வாய்ந்த சூயஸ் கால்வாயை நாசர் தேசிய மயமாக்கினர். இதனுல் உலக அரசியலில் எகிப்துக்கும், நாசருக்கும் மிகுந்த செல்வாக்கு ஏற்பட்டது.

அரபு நாட்டு மக்கள் எகிப்தையே உதாரணமாகக்கொண்டு மத்தியக் கிழக்கு நாடுகளில் ஏகாதிபத்ய ஆதரவாளர்களை எதிர்த்துப் புரட்சி செய்து வருகின்றனர். அதில் ஒன்றுதான் ஈராக் ராணுவப் புரட்சியாகும். கடந்த 21-ம் நாள் (ஜூலை) இராக்கில் ராணுவத்தினர் சில மணிநேரத்திற்குள்ளேயே ஆட்சியை கைப்பற்றி விட்டனர்.

23 வயதுடைய இராக் மன்னர் பெய்சல், அவருடைய மாமனர் அப்துல்இலா, பிரதமர் நூரி ஆகியோர் புரட்சியாளர்களால் கொல்லப்பட்டனர். ராணுவப் புரட்சிக்குத் தலைமை வகித்த ஜெனரல் அப்துல்கரீன் காசிம் என்பவர் புதிய இராக்கின் பிரதமராகியிருக்கிருர். 45 வயதுடைய இவர் நடுத்தர வகுப்பில் பிறந்தவர் - திருமணமாகாதவர்- ஈராக்கிலும், பிரிட்டனிலும் ராணுவக் கல்லூரியில் பயின்றவர். ஈராக்கில் அந்நிய ராணுவம் இருந்தும் அவர்களுக்கும் தெரியாமல் மிக ரகசியமாக ராணுவப் புரட்சியை வெற்றிகரமாக முடித்திருக்கிருர். ஈராக்கை மக்கள் குடியரசாக பிரகடனப்படுத்தியிருக்கிருர். புரட்சியைப் பற்றி அவர் கீழ்க்கண்டவாறு கூறுகிருர்.

"ஏகாதிபத்தியத்திற்கு இந்நாட்டையும் இந்நாட்டு மக்களையும் பலியிடுகின்ற ஊழல் நிரம்பிய ஆட்சியை மக்களின் உதவியாலும், ராணுவத்தின் உதவியாலும் வீழ்த்திவிடடோம் ஆனல் ஈராக்கில் உள்ள அந்நியர்களுக்கு எவ்வித சேதமும் விளைவிக்காதீர்கள். அதுவே ஏகாதிபத்தியவாதிகளுக்கு நாம் தரும் மன்னிப்பாக இருக்கட்டும இவ்வாறு மக்களைக் கேட்டுக்கொண்டார். ஈராக் புரட்சியைக் குறிப்பிடும் போது அதன் பழைய வரலாறுகளையும் ஆராய்வது பொருத்தமாகும். அராபிய மக்களைக் கொண்ட இந்நாட்டில் உலகிலேயே பெட்ரோலியம் அதிகமாகக் கிடைக்கும் இடங்களில் இந்நாடும் ஒன்ருகும்,

ஈராக்கை சமரியர்கள், அக்கடியர்கள், பாபிலோனியர்கள், மங்கோலியர்கள், கிரேக்கர்கள், ரோமானியர்கள், பார்த்தியர்கள் ஆகியோர்கள் ஆண்டதற்கு 5000 வருடங்களுக்குமுன் எழுதப்பட்ட சரித்திரக் குறிப்புகள் காணப்படுகின்றனவாம். 1934ல் துருக்கி வசம் வந்த இராக் முதல் உலக யுத்தம்வரை இருந்தது. 1921ல் எமீர் பெய்சல் என்பவர் ஈராக்கின் முதல் மன்னரானர். அதன் பிறகு பிரிட்டனுக்குச் சொந்தமாகி 1933ல் சுதந்திர நாடாகியது.

கடந்த சில நாட்களுக்குமுன் கொல்லப்பட்ட மன்னர் பெய்சல் 1953ல் தான் பட்டத்திற்கு வந்தார். தன் தந்தை எமீர் பெய்சல் இறந்தபோது இவர் சிறுவனுக இருந்ததால் இவருடைய மாமனுன அப்துலஇலா 1953 வரை மன்னராக இருந்தார்.

70 வயதுடைய நூரி-அல்-சையது என்பவரை பிரதமராகக் கொண்டு ஒரு மந்திரி சபையும் இருந்து வந்தது, இந்நாட்டு சர்வாதிகாரியாகவே விளங்கி வந்தார். அரசியல் கட்சிகளை தடை செய்தார். இவரைக் கொல்ல பலமுறை முயற்சி செய்தார்கள். ஆனல் முடியவில்லை. இவர் கடைசியாக அமைத்த மந்திரி சபை 17-வது மந்திரி சபையாகும். கடந்த 25 ஆண்டுகளாக இந்நாட்டை ஆட்டிப் படைத்து வந்தார். இவருடைய பெயர் நூரி என்பதற்கு மகிழ்ச்சி என்று பொருளாம்.

ஈராக்கின் வடகிழக்கில்உள்ள கிர்கூக் என்ற இடத்தில் சாதாரண குமாஸ்தாவின் மகனுகப் பிறந்து இளமைப் பருவத்திலேயே ராணுவக் கல்லூரியில் சேர்ந்து பயிறசி பெற்ருர். அராபிய இயக்கத்தில் தீவிரவாதியாக இருந்ததால் அரசியலில் நெருக்கடி ஏற்பட்டு உலக யுத்தம் முடியும்வரை எகிப்திலேயே வாழ வேண்டியவரானுர். துருக்கிக்கும் ஈராக்குக்கும் நடந்த போரில் இராக்குக்கு ஆதாவாக ஜாபர் பாஷா-அல்- அஸ்காரி என்ற படைக்கு தலைமை தாங்கி போரிட்டார். இதனுல் ஈராக் அரசியலில் செல்வாக்கு ஏற்பட்டது. போருக்குப் பிறகு அமைக்கப்பட்ட இராக் மந்திரி சபையில் பாதுகாப்பு மந்திரியானுர்.

1930ல் முதல் தடவையாக ஈராக்கின் பிரதமரானுர். இவருடைய ஆட்சியில்தான் பிரிட்டனுக்கு இராக்கில் ராணுவதளமும், எண்ணெய் வயல்களை நடத்தும் உரிமையும் கொடுத்தார். 25 வருடத்திற்கு பிரிட்டனுடன் ஒப்பந்தம் ஒன்றும்செய்து கொண்டார்.

1936ல் ஜெனரல் பீக்கர்சாதிக் என்ற ராணுவத் தளபதி ஆட்சியை கைப்பற்றி பிரதமர் நூரியை நாடு கடத்தினன். ஆனல் ஒரு வருடத்திற்குள் பீக்கர் சாதிக் கொலை செய்யப்பட்டு மீண்டும் நூரி பிரதமரானுர். 1939ல் இரண்டாவது உலக யுத்தம் மூண்டபோது நூரி ஈராக் பிரதமராகவும் வெளிநாட்டு மந்திரியாகவும் இருந்தார். நேச நாடுகளுடன் சேர்ந்து ஜெர்மனியை எதிர்த்துப் போரிட்டார்.

மீண்டும் ஒருமுறை, நூரி வெளிநாட்டில் இருந்தபோது ராணுவத்தளபதி ரஷீத்அலி என்பவர் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டார். ஆனல் அவரும் கொலை செய்யப்பட்டு மீண்டும் நூரி பிரதமரானுர். 1954ல் கடைசியாக 17-வது முறையாக பிரதமரானபோது கம்யூனிஸ்டுகளை ஒழிப்பதற்காக ராணுவத்தினருக்கும், போலீசுக்கும் சம்பளத்தை உயர்த்தினுர்.

அமெரிக்காவின் ஆதரவில் உருவாக்கப்பட்ட பாக்தாத் ஒப்பந்தம் ஏற்படுவதில் பெரும் பங்குகொண்டார். ஈராக், ஈரான், துருக்கி, ஜோர்தான், பாக்கிஸ்தான் ஆகிய 5 நாடுகள் கொண்ட உறுப்பாகும். இதில் அமெரிக்கா உறுப்பினராக இல்லாவிட்டாலும் பார்வையாளராகக் கலந்து கொள்ளும். இவ்வொப்பந்த நாடுகளின் பாதுகாப்பின் பொருட்டு உருவாக்கப்பட்ட இத்திட்டத்திற்கு ஈராக் மன்னர் பெய்சல் தலைவராக இருந்தார்.

1956ல் சூயஸ் கால்வாய் தேசிய மயமாக்கப்பட்ட போது ஈராக்கிலும் எண்ணெய் வயல்களை தேசிய மயமாக்கவேண்டும் என்ற எண்ணம் கொண்ட இளைஞர்கள் ஆர்பாட்டமும், புரட்சியும் நடத்தத் தொடங்கினர். ஊரடங்குச் சட்டம் பிறப்பித்து, நாசர் ஆதரவாளர்களையெல்லாம் கைது செய்தார். இச்சமயம் அவருக்கு ஏற்பட்ட எதிர்ப்பு மிக பலமாக இருந்தது. நூரியைக் கொல்ல பல முயற்சிகள் செய்யப்பட்டன. இவர் பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளப் போகும்போது கையில் துப்பாக்கியுடனேயே செல்வாராம். ஒருசமயம் இவரை நோக்கி சுடப்பட்ட குண்டிலிருந்து மயிரிழையில் தப்பித்துக் கொண்டார். இதைக் குறித்து பிரதமர் நூரி (The man who assasinate me is not yet born) என்னைக் கொல்லும் மனிதன் இன்னும் இந்த உலகத்தில் பிறக்கவில்லை. என்று சொன்னுர். அவர் சொன்னதைப் பொய்யாக்க வேண்டும் என்று தானே என்னமோ, உம்மைக் கொல்ல நாங்கள் பிறந்திருக்கிருேம் என்று செய்து காட்டிவிட்டார்கள்.

நாகை. வில்சன்

> ''போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்: அஞ்சேன் !''

எண்ணம்

மலர் 5 ‖ 2—8—58 ‖ இதழ் 7

அவர்களின் எச்சில் இவர்களுக்குப் பன்னீர் !

காட்டுமிராண்டி காலத்திற்கும், மனித நாகரீகத்தின் துவக்கக் கட்டத்திற்கும், இடைப்பட்ட நாட்களில் வாளுக்கும் கேடயத்திற்கும் மதிப்பிருந்தது. மிரட்டலுக்கும் உருட்டலுக்கும் மரியாதை இருந்தது. அந்தக் காலத்திலே போர் எப்போது வரும் என்று சொல்லமுடியாது. காலையிலே மன்னராக இருந்தவன் மாலையிலே காட்டிலே அலைவான். திடீரென்று ஆண்டி அரசனுகக் கொலுவீற்றிருப்பான். நிச்சயமற்ற அந்த வாழ்க்கையைக் காலம் மாற்றியமைத்தது. வேலும் வாளும் குழந்தைகளுக்குப் போதிக்கப்படும் பாடப்புத்தகத்தில் இடம்பெற்றுவிட்டன. உறுதிமொழிகள்—ஒப்பந்தங்கள் தலையெடுத்தன. உலகம் ஒரு கூட்டமைப்புக்கு இழுத்து வரப்பட்டது. அந்தந்த நாட்டுமக்களுக்கும் பீதி ஒழிந்து நம்பிக்கை ஏற்பட்டது. இத்தனை கட்டுப்பாடுகளையும் கடந்து இரண்டு உலக யுத்தங்கள் தோன்றி உலகத்தையே அலக்கழித்து வேடிக்கை பார்த்துவிட்டன. நம்பிக்கையோடிருந்த மக்கள் தளர்ந்தார்கள்; நாசம் விளையப்போகிறது என்று நடுங்கினுர்கள். இந்த நிலை பத்தாண்டு காலமாக மக்களைப் பிடிப்பதும், பின் விடுவதுமாக இருந்து வந்தது. இப்போது திடீரென்று உலக யுத்தத்திற்கான சூழ்நிலை உருவாகி மூழ்கியிருக்கிறது. செங்கடலையும், அரேபியாவையும் ஒட்டிய ஈராக்-ஜோர்டான் பகுதியில் பெரும்புரளி கிளம்பி ஒடுங்கியிருக்கிறது. இது இந்தியாவின் உள்நாட்டுப் பிரச்சினையா ? இல்லை. கொஞ்சம்கூட ஒட்டு உறவில்லாத தூரதேசத்துத் தகராறு. ஓடிந்த துப்பாக்கிகளையும் ஓட்டை விமானங்களையும் வைத்துக்கொண்டிருக்கும் பண்டித ஜவகர்லால்நேரு இந்தத் தகராறில் அதிக அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறுர். உள்நாட்டு எதிர்ப்பை சரிக்கட்டாவிட்டாலும், வெளிநாட்டுப் புகழ் சிறிதும் குறையாமல் பாதுகாத்துக்கொள்ள நினைக்கும் பண்டித நேரு ஈராக் தகராறில் அளவுகடந்த அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிறுர். சொத்து சுகத்தை இழந்தாவது, உள்நாட்டு உரிமைகளைப் பலியிட்டாவது வெளிநாட்டில் பேரும் புகழும் சம்பாதிக்க வேண்டும் என்பதே அவரது வெளிநாட்டுக் கொள்கை என்பதை அவர் நிரூபித்து வருகிறுர்.

இலங்கையிலே தமிழர்கள் அவதிப்பட்டார்கள்—நேரு கவனம் செலுத்தவில்லை. மாறுக, 'இது நமக்குச் சம்மந்தமில்லாதது' என்றுர். தமிழர்களுக்குப் பரிந்து பேசாவிட்டாலும், அயல்நாட்டுப் பிரச்சினை என்ற முறையில் கூட அவர் கவனம் செலுத்தவில்லை. இன்று அவர் ஈராக் பிரச்சினையில் தலையிடுகிறுர். முன்னணியில் நின்று காரியமாற்றுகிறுர். ஈராக் என்ன உள்நாட்டுப் பிரச்சினையா ? சொந்தத் தகராரு ? இந்தியாவுக்கும் அந்தத் தகராறுகளுக்கும் தொடர்பு ஏதாவது உண்டா ? உலக அமைதியைக் காப்பதுதான் என் தொண்டு—என்று நேரு சொல்வாராளுல், இலங்கையில் அமைதியைக் காக்க ஏன் நேரு வரவில்லை ?

கடந்த ஒருவார காலமாக எல்லாத் தினசரிகளிலும் நேருவின் வெளிநாட்டு விவகாரங்களைப் பற்றிய செய்திகள்தான் வருகின்றன. அவைகளில் சில :—

மத்தியக்கிழக்கு விவகார சம்மந்தமாக உடனடியாக குருஷேவுக்கு நேருஜி கடிதம் எழுதினர்.

ஐ. நா. வில் அதிபர்கள் மாநாடு நடத்த வல்லரசுகள் எல்லாம் சம்மதித்தால் பிரதம மந்திரி நேரு விமானம்மூலம் நியூயார்க் செல்ல தயாராக இருப்பார்.

மத்தியகிழக்கு நிலைமை பற்றி இந்தியப் பிரதம மந்திரி நேருஜியுடன்தான் ஆலோசனை நடத்திக்கொண்டிருப்பதாகவும் அதுபற்றி வெளியில் தெரிவிப்பதற்கில்லையென்றும் இலங்கைப் பிரதமர் பண்டார நாயாக பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தார்.

இலங்கையிலுள்ள இந்திய ஹை கமிஷனருக்கு நேருஜி எழுதிய கடிதமொன்றில் மத்தியக்கிழக்கிலிருந்து உடனடியாக அந்நியத் துருப்புகள் வாபசாக வேண்டும் என்று நேருஜி அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறுர்.

லெபனுனில் அமெரிக்கப் படைகள் புகுவதை உத்தியோகப் பூர்வமாக இந்திய சர்க்கார் கண்டித்திருக்கிறது. ஐசனேவருக்கும், அரபுக்குடியரசுத்தலைவர் நாசருக்கும் நேரு கடிதம் எழுதியிருக்கிறுர்.

லெபனுனில் யு. எஸ். துருப்புக்கள் இறக்கப்பட்டது குறித்து இந்தியா மிகுந்த கவலைகொண்டிருப்பதாக நேரு அறிவித்தார்.

படைபலக் குறைப்பு, லெபனுன் பிரச்சினை, ஹங்கேரிப் புரட்சி—குறித்து காங்கிரஸ் காரியக்கமிட்டியில் நேரு வருத்தம் தெரிவித்தார்.

காங்கிரஸ் காரியக்கமிட்டியில்கூட வெளிநாட்டுப் புரட்சிகளுக்கு வருத்தம் தெரிவித்திருக்கிறுர்; இலங்கைப் படுகொலைகளுக்கு அதுவும் இல்லை.

இது தென்னுட்டுக் காங்கிரஸ்காரர்களுக்குப் புரிகிறதா? உணர்ச்சி இருக்கிறதா? இல்லை. ஏன் இந்த அடிமைப்புத்தி! வடநாட்டான் காரி உமிழ்ந்தாலும் அது இவர்களுக்குப் பன்னிராகப் படுகிறது. வெட்கக்கேடு ! வெட்கக்கேடு !!

அறிவிப்பு

''தென்றல்'' 16-8-58உ இதழில் ஆசிரியர் கண்ணதாசன் எழுதும் ''ஊமையன் கோட்டை'' தொடர்கதை ஆரம்பமாகிறது. ஆகையால் ஏஜண்டுத் தோழர்கள் கீழ்க்கண்ட முறைகளைப் பின்பற்றக் கோருகிறேம்.

- ★ தகுந்த முன்பணம் இல்லாத ஏஜண்டுகள் உடனடியாகப் பணத்தை அனுப்பி முன்பணத்தை அதிகப்படுத்திக் கொள்ள வேண்டும். தகுந்த முன்பணமின்றி அதிகப் பிரதிகள் அனுப்பி வைக்க இயலாது.
- ★ அதிகம் தேவையான பிரதிகளுக்கு 8-8-58ந் தேதிக்குள் தெரிவிக்கவேண்டும்.
- ★ ஜூலை மாதப் பட்டியல் தொகையை 10-8-58ந் தேதிக்குள் அனுப்பிவைக்காத ஏஜண்டுகளுக்குப் பிரதிகள் அனுப்பிவைக்கப்படமாட்டாது.
- ★ அதன்பின் ஒவ்வொரு மாதமும் பட்டியல் பாக்கியை 15-ந் தேதிக்குள் அனுப்பிவைக்காவிடில் முன்னறிவிப்பின்றி பத்திரிகை நிறுத்தப்படும்.
- ★ பட்டியல் தொகையை குறித்த காலத்திற்குள் அனுப்பி வைத்தால், பத்திரிகையும் தடங்கலின்றி வந்து சேரும்.

''தென்றல்''ன் வளர்ச்சியில் நாட்டங்கொண்ட ஏஜண்டுத் தோழர்கள் மேலே கண்ட முறைகளைப் பின்பற்றி எமக்கு ஆதரவு தர வேண்டுகிறேம்.

நிர்வாகி,
''தென்றல்''

வெண்பாப் போட்டி-23.

ஈற்றடி :

கண்டபயன் ஒன்றில்லை காண்.

முடிவு தேதி 9-8-58.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை - 6.

இறைவனுக்கு ஏமாற்றம்

[''சரிதா''வில் வந்த கவிதையின் தமிழாக்கம்.]

உரம்பெற்ற விரிநெஞ்சு, உடலம் குன்று
ஒளிவிழிகள் பறங்கிக்காய் கரமோ தூண்கள்
அரனார்பால் வரம்பெற்ற அசமில் என்னும்
அரக்கனுக்குப் பொருந்துமிவ் வுவமைக் கூட்டம்
தரம்குறைந்த செயல்செய்தான், வழியில் செல்வோர்
தலைகொய்தான், பொருள்கொய்தான், பெண்கள் கற்பைத்
தரைவீழ்ந்த மலர்போலக் கருதி, புன்மைத்
தொழில்செய்தான் மானத்தை விலைக்குப் பெற்றான்.

பரிந்தோம்பி உலகத்தைக் காக்கும் ஈசன்
பவனிவரும் காலத்தில் நடந்த காதை
தெரிந்தோம்பி புலைத்தொழிலை அசமில் செய்த
தீராத பாவத்தால் சொர்க்க மென்னும்
சரியாத கோட்டைக்குத் தூணாய்ச் சேர்க்கச்
சாத்திரத்தில் இடமில்லை என்றே ஈசன்
புரியாத மொழிமூலம் தேவர் முன்னம்
புகன்றான்பின் காலனுக்கு நகலொன் றீந்தான்.

பூத்தமலர் உலர்வதிலே விந்தை யில்லை
பழுத்தகனி உதிர்வதிலே வியப்பும் இல்லை.
தீத்தொழிலைச் செய்துவந்த அரக்கன் ஓர்நாள்
சாகின்ற தறுவாயில் கிடந்தான், அங்கே
காத்திருந்தார் காலதேவன் தூதர், கண்கள்
கலங்கிப்போய் நின்றிருந்தான் மைந்தன், மெள்ள
வாய்திறந்தான் குகைவாயில் திறப்ப தைப்போல்
வார்த்தைகளைப் பனம்பழம்போல் உதிர்ந்தான் பின்னர்,

''நாராய ணா''வென்ற நாமந் தன்னை
நயமாக உச்சரித்தான் அசமில்; அந்த
நாராய ணன்வேறு யாரு மில்லை
நயனத்தில் நீர்வழிய நின்றி ருக்கும்
சீராளன் நற்பெயர்தான், சிறகி ழந்த
சிட்டுப்போல் மனம்நொந்து தந்தை மீது
ஓராமல் உணராமல் விழுந்தான், கண்ணில்
ஒருபடிவெந் நீர்கொணர்ந்தான் கலக்கம் கொண்டான்.

பெயர்கேட்ட நேரத்தில் மகுடி கேட்ட
பாம்பைப்போல் எழுந்துவந்து பக்தன் முன்னால்
கயல்விழியின் ஒளிகாட்டி நின்றார், காலன்
கட்டளையைப் புறக்கணித்தார், தூதர் தம்மைச்
செயலாற்ற வேறெங்கோ போகச் சொல்லித்
திருமால்தன் பெருங்குணத்தின் சான்று தந்தார்
புயலுக்குப் பின்னரெழும் நாணல் போல
படுக்கைவிட்டு அசமில்லும் எழுந்தான் நன்கு.

முன்னாளில் நடந்தகதை; இன்றும் கூட
முறைதவறும் அசமில்கள் மிக்க வுண்டு
பொன்னுக்கும் பொருளுக்கும் ஆசைப் பட்டு
புலைத்தொழிலை மேற்கொள்ளும் பல்லோர் உண்டு
எந்நாளும் அவர்கட்கு இன்பம் ஈயும்
இறைவனெனும் பெயருள்ள ஒருவன் உண்டு
நன்றாக ஆராயச் சொன்னால் கூட
நாராயணன் தனைநம்பும் கூட்டம் உண்டு.

வட்டிக்குப் பணம்தந்து ஏழை மக்கள்
வாழ்க்கையினைப் பாழாக்கிச் செல்வம் சேர்க்கும்
துட்டனொரு சிற்றூரில் வசித்து வந்தான்
தொந்திமட்டும் பெரும்பானை அளவி ருக்கும்
எட்டணாவிற் கெட்டணாவென் றெண்ணி வாங்கும்
இரக்கமனம் படைத்தவனென் றவனை மக்கள்
திட்டாமல் திட்டிட்டார்; அவனும் உள்ளம்
சேராமல் செல்வத்தைச் சேர்த்தே வந்தான்.

கழுகுக்கண் செல்வனுக்கு அழகுப் பெண்கள்
கோழிகளின் குஞ்சுக்கு நிகரே யாவர்
நிழல்போல அவர்கள்பின் தொடர்வான், நச்சு
நினைவாலே அவர்கற்பைக் கெடுப்பான், மண்ணில்
புழுப்போலே உழலும்அச் செல்வன் பக்கம்
பரிந்துரைக்கப் பத்துப்பேர் இருப்பர்; நித்தம்
விழுதூன்றும் மரத்திற்குப் பலம்போல் அந்த
வீணர்தம் கூட்டத்தால் பலமும் பெற்றான்.

நல்வினைக்கு உள்ளத்தில் இடம்தா ராது
நாள்தோறும் தீவினையைச் செய்தே வந்த
செல்வனுக்கு நரகம்தான் கிட்டும் என்று
சிவனார்தம் குறிப்பேட்டில் குறித்துக் கொண்டார்
கல்நெஞ்சச் செல்வனுக்கு நரகம் சொர்க்கம்
கடவுளரின் கூட்டாட்சி என்றே கூறும்
சொல்லாளர் கூற்றில்நம் பிக்கை யில்லை
சுகமாகத் தன்வழியில் நடக்க லானான்.

வான்பார்த்த பெருவயிற்றில் ஒருநாள் செல்வன்
வகைவகையாய் உணவுகளை அடுக்க லானான்
மீன்கறியின் சுவையாலே உணவை நன்கு
மெல்லாமல் விழுங்கிட்டான் அரவம் போல
மானுண்ட மலைப்பாம்பு புரள்வ தைப்போல்
மண்மீது விழுந்தபடி புரண்டான் சோர்ந்தான்
தானுண்ட உணவெல்லாம் தேளாய் மாறித்
தாக்குவதைப் போலுணர்ந்தான் புனல்வ டித்தான்.

இத்தகைய நேரத்தில் எங்கி ருந்தோ
ஏப்பமொன்று வந்ததனால் வாய்பி ளந்து
மத்தளம்போல் முழக்கமிட்டான்; ''ஓம்''என் றந்த
மகத்தான ஈரெழுத்தும் மண்ணில் அன்றி
தித்திக்கும் மேலுலகில் கேட்ட தாலே
திருமாலும் பக்தன்முன் ஓடி வந்தார்
எத்திக்கும் காலதேவன் தூதர் கண்டு
இரும்புள்ளச் செல்வர்மேல் இரக்கங் கொண்டார்.

துன்பத்தில் தலையழைத்த பத்தன் வாழ்வைத்
திருமால்தன் திறமையினால் காத்தார்; ஆனால்
இன்பத்தின் அரவணைப்பில் உறங்கும் செல்வன்
ஏப்பத்தால் சுகம்பெற்றோம் எனநி னைந்து
முன்போல மகிழ்ந்திருந்தான்; ஏமாற் றத்தால்
முகம்வெட்கித் தலைகுனிந்தார் திருமால் மேலே
முன்னாளில் மட்டுமல இன்றும் கூட
முக்காலக் கடவுளரும் ஏமாந் தார்கள்.

—துறையூர் ந. அலி.

அண்ணன்

விதி யாரை விட்டது? அரிச்சந்திரனை அடிமையாக்கியது. சந்திரமதியை கொடுமைப்படுத்தியது. நாடாள இருந்த ராமனை காட்டுக்கு அனுப்பியது. சீதையை ராவணன் சிறை எடுத்துச் செல்ல துணை புரிந்தது. நம்மை அதுமட்டும் விட்டு வைக்குமா–அழகிக்கு இதுதான் கவலை!

கடலுக்கு அருகாமையிலே வாழ்பவர்கள் தண்ணீரைக் கண்டு பயப்படுவதில்லை. புதியவர்கள்தான் அலைக்குப் பயந்து ஓடுகிறார்கள் துன்பமும் விதியும் இப்படித்தான்!

பிறந்தபொழுதே சொட்டுப் பாலுக்குத் திண்டாடியவர்கள், வடிதண்ணீரைக் குடித்தே வளர்ந்தவர்கள் துன்பத்தைக் கண்டு சிரிக்கிறார்கள். விதிக்கு அவர்கள்தான் எஜமானர்கள். பளிங்கு மண்டபத்திலே வாழ்ந்து, பாதியிலே கஷ்டப்படுபவர்கள். அலையைக் கண்டு ஓடுகிறவர்களைப்போல், துன்பத்தைக் கண்டு பயப்படுகிறார்கள். இங்கே விதி அவர்களுக்கு எஜமானனாக கொலு வீற்றிருக்கிறது.

அழகி குழந்தைப் பருவத்தில் வெள்ளிக் கெண்டியிலே பால் குடித்து வளர்ந்தவள். வெள்ளிக் கிண்ணத்தில் தெளிந்த தேனை வைத்துக்கொண்டு அதிலே பலாச் சுளையை, துவைத்து துவைத்துச் சாப்பிட்டு வளர்ந்தவள். அவளுக்கு பத்து வயதாகிறபொழுது, பள்ளிப் பருவத்திலேதான் துன்பம் அவளைத் தொடர ஆரம்பித்தது. அவள் நினைத்துக்கொண்டிருக்கிற விதி விரட்டத் தொடங்கியது.

சுகம் வருகிறபொழுது வேகமாக வந்துவிடுவதில்லை. கூட்டிலிருந்து ஒழுகும் தேனைப்போல் சொட்டுச் சொட்டாக வந்து சேருகிறது. துன்பம் அப்படியில்லை. அடை மழை காலத்து ஆற்று வெள்ளத்தைப் போல் தொடர்ச்சியாக வருகிறது.

அழகியின் வாழ்க்கையில் ஏற்பட்ட சோகச் சம்பவம், கதைகளிலேகூட காணமுடியாத நிகழ்ச்சிகள். மின்சாரம் தாக்கி தந்தை இறந்தார். வீடு தீப்பற்றி எறிந்து அதிலே தாய் வெந்து மடிந்தாள். இந்த வேதனை தீருவதற்குள், உயிருக்குயிரான ஒரே அண்ணனும் ரயில் விபத்தில் இறந்துவிட்டதாக செய்தி வந்தது. தாங்க முடியுமா அவளால்? பஞ்சிலே நெருப்பு விழுந்த நிலைதான். இரண்டு மாதம் கழித்து, விபத்தில் இறந்து போன அண்ணனுக்கு நஷ்ட ஈடாக அரசாங்கத்திடமிருந்து, இருநூறு ரூபாய் அழகிக்கு வந்தது. அதை வைத்து ஒரு வருஷத்தை ஓட்டினாள். இனி வெளியேபோய் உழைத்தால்தான் உலைக்கு அரிசி வரும். அந்த நிலைமை!

பெண்கள் பாவாடையோடு திரிகிற காலம் மாறி, மேலாடை அணிந்து கொள்கிற பருவம் வருகிறபொழுது அவர்களின் அழகு நாளுக்குநாள் ஏறிக்கொண்டே போகிறது. உடலமைப்பில் ஒரு மாற்றம், மினுமினுப்பு, பளபளப்பு, நடையில் நளினம், முகத்தில் கவர்ச்சி, பேச்சில் இனிமை. மழை பெய்து ஓய்ந்து வெறித்துக்கிடக்கும் வானத்தில் திடீரென்று தோன்றும் வர்ணக்கோடுகளைப்போல், பருவமடைந்தவுடனேயே பெண்களுக்கு இந்த வண்ணங்கள் நிறைந்துவிடுகின்றன. ஆண்களுக்கு இந்த மாறுதல் இல்லை! அவர்கள் குழந்தைப் பருவத்திலிருந்து, காளைப்பருவம்வரை வெறும் உடல் வளர்ச்சியைத் தவிர, வேறு கவர்ச்சியில்லை. இது காலம் வகுத்த சட்டம்!

அழகிக்கு வயது பதினாறு. காலம் அவளை சிலையாக்கி வைத்திருந்தது. இந்த நிலையில் அவள் எங்கே போய் யாரிடம் வேலை கேட்பது. பார்க்கிற பார்வைக்கும் நடக்கிற நடைக்கும், பேசுகிற பேச்சுக்கும், புதுப்பொருள் சொல்லுகிற பருவம். அழகி ஒன்றும் புரியாமல் வீட்டுக்குள் அடைந்து கிடந்தாள். விதி சிரித்தது! தன் காரியம் வெற்றியடைந்துவிட்டதாக அது வெள்ளி விழாக் கொண்டாடியது அழகி அழுதாள்! புரண்டு. புரண்டு படுத்தாள். கோரைப்பாய் பதித்த ரேகைகள் கன்னத்தில் கோடுகளாக இருந்தது. அழுது வடித்த கண்ணீர் கரையாக படிந்திருந்தது. கொட்டாவி விட்டபடியே எழுந்து பாயைச் சுருட்டி மூலையில் சாத்திவிட்டு சோம்பல் முறித்துக் கொண்டாள். அழுகிற குழந்தைக்கு விளையாட்டுச் சாமானைக் காட்டுவது போல், வேதனைப்படுகிற மனத்துக்கு ஏதாவதொரு வேடிக்கையை காட்டினால்தான் சிறிதுநேரத்திற்காவது கவலையை மறந்து அமைதியாக இருக்கிறது. அழகி தெருக்கதவைத் திறந்துகொண்டு வாசலில் வந்து நின்றாள். மாலை நேரமாதலால் வேலை முடிந்த தொழிலாளர்கள் கூட்டமாக சிரித்துப் பேசியபடி போய்க்கொண்டிருந்தனர். காரும், வண்டியும் வரிசை வரிசையாக வடம் பிடித்ததுபோல் சென்றுகொண்டிருந்தன. தெரு பரபரப்பாக இருந்தது. அழகி இந்தக் காட்சிகளை வியப்போடு பார்த்துக்கொண்டு நின்றாள். கண்களுக்கு விருந்து கிடைக்கும் பொழுது கவலை ஒதுங்கித்தானே நிற்கிறது.

"அம்மா பூ வேணுங்களா" மல்லிகைச் சரத்தைத் தூக்கிப் பிடித்தபடியே கேட்டான் பூக்காரன்.

அழகி வேண்டாம் என்பதற்கு அடையாளமாக தலையை ஆட்டினாள். பெண்கள் திருமணமாகாததற்கு முன்பு பூவையும், பொட்டையும், பொன்னையும், மணியையும் ஒதுக்கிவைத்திருக்கவேண்டும். திருமணமான பிறகு கணவன் மகிழ்வதற்காகவே அதைச் செய்து கொள்ள வேண்டும் என்ற நல்ல பழக்கம் தமிழ்நாட்டுப் பெண்களுக்கு மட்டுமே சொந்தம்.

"ஏ, மல்லிகைப்பூ நில்லு" என்று கூப்பிட்டுக்கொண்டே ஒரு பெண் வந்துகொண்டிருந்தாள். அடுப்புக் கறி நிறம், அழகுக்கும் அவளுக்கும் வெகுதூரம். காஞ்சீபுரம் கண்டாங்கியை தாறுமாறாகக் கட்டியிருந்தாள். யாருக்கோ தைத்த வெல்வெட் ரவிக்கையை அவள் போட்டிருந்தாள். தலையணைக்கு உறை மாட்டியதுபோலிருந்தது. இரண்டு கண்ணி அதிகம் வாங்குவதற்கு பூக்காரனோடு அரைமணிநேரம் தகராறு செய்து பூவை வாங்கித் தலையில் வைத்துக்கொண்டாள். கையிலே வைத்திருந்த உடைந்த கண்ணாடி மூலம் பூ வைத்திருப்பது சரிதானா என்பதை ஒருமுறை அழகு பார்த்துக்கொண்டாள்.

"என்ன வள்ளி எங்கே கிளம்பிட்டே, அலங்காரமெல்லாம் பிரமாதமாயிருக்கே" என்று கேட்டபடியே அவளருகே வந்தான் ஒரு சிகரெட் மைனர்.

அவள் – 'எல்லாம் உனக்காகத்தான்."

"அவனுக்கு மட்டுந்தானா எனக்கில்லையா வள்ளி" என்றான் சிகரெட் மைனருக்குப் பின்னால் நின்றுகொண்டிருந்த கிருதா மீசைக்காரன்.

"உனக்கும் சேத்துத்தான். ஆமா நீ ஏன் நேத்து வர்லே?

"காசு இல்லே அதுதான் வரலே! இந்தா இன்னக்கி இவ்வளவுதான்! இதை வச்சிக்க அப்புறம் வர்ரேன்" என்று அவள் கையில் ஒரு ரூபாய் நோட்டைக் கொடுத்துவிட்டு நடந்தான் கிருதா மீசைக்காரன். அவள் அந்த நோட்டை மடித்து மடியில் வைப்பதற்குள் இன்னொரு முழு ரூபாய் அவள் கையில் வந்து விழுந்தது;

"இந்தா இது என்பங்கு, போதுமா" என்று அவளைப் பார்த்துச் சிரித்தான். சிகரெட் மைனர்.

இந்தக் காட்சிகளை இமை கொட்டாமல் பார்த்துக்கொண்டு நின்றாள் அழகி. அவளுக்கு இது ஆச்சரியமாகவும், அருவருப்பாகவும் இருந்தது. முதல் இல்லாமல் பணம் சம்பாதிக்கும் இந்தப் புதிய வியாபாரத்தை முதன் முறையாக இப்பொழுதுதான் பார்க்கிறாள். காய்ந்து போன உதடுகளில் நெளிந்த வரட்டுச் சிரிப்பு முத்துச் சிந்தினாற்போல் நாலு வார்த்தை. இந்த மூலதனத்தை வைத்துக்கொண்டு இரண்டு விநாடிகளில் இரண்டு ரூபாய் சம்பாதித்துவிட்டாள். நாளை என்ன செய்வது என்பதைப்பற்றி அவளுக்குக் கவலையில்லை எட்டு வருடங்களாக அவளுக்கு இதே தொழில். கண்களில் ஒளியும், சிரிப்பில் உயிரும், வாலிப முறுக்கும் இருந்தவரை அவள் பெரியெடத்துச் சீமான்களின் விளையாட்டுப் பொம்மை. முகத்தில் திரை விழுந்துவிட்ட பிறகு, வாலிபம் விடைபெறுகிறபொழுது, கட்டிக் கழித்த கண்டாங்கி குடுகுடுப்பைக்காரன் தோளுக்குப் போவதுபோல், சீமான்கள் இனித் தேவையில்லை என ஒதுக்கித் தள்ளிய பிறகு, பாதையோரத்திற்கு வந்திருக்கிறாள். கட்டுப்பாடில்லாத காளையர்களுக்கு அவள் ஜோடிப் புறா!

அழகி பெருமூச்சுவிட்டாள். அவளால் நிற்க முடியவில்லை. கால்கள் தளர்ந்தன. உத்திரத்தை கெட்டியாகப் பிடித்துக்கொண்டாள்.

"பசி வந்திட்டா பத்தும் பறந்து போகும்பா, ஒழுக்கமாவது, பண்பாடாவது" வீதியில் இருவர் காரசாரமாகப் பேசிக்கொண்டு போனார்கள் அழகிக்கு ஆத்திரம் பொங்கியது வார்த்தைகள் வெடித்தன.

"சர்க்கஸ்காரன் மிருகங்களை அடக்கி வைத்திருப்பதுபோல் மனிதன் அவன் ஆசைகளை அடக்கி வைத்திருக்க வேண்டும். கொஞ்சம் ஏமாந்தால் புலி சர்க்கஸ்காரனைக் கொன்றுவிடும். ஆசைகளும் அப்படியே! பசியைவிட, உயிரைவிட மனிதர்களுக்கு மானம்தான் பெரிது.

"கதிரவனைக் கண்டால் மட்டுமே தாமரை சிரிக்கிறது. அல்லியின் சிரிப்பு நிலவுக்கு மட்டுமே சொந்தம். அந்த மலர்களோடு ஒப்பிட்டுப் பேசப்படும் பெண்களில் சிலர் மட்டும் ஏன், வெள்ளிப்பணம் தருபவர்களுக்கெல்லாம் பல்லைக் காட்டுகிறார்கள். பின் தங்கை, தாரமென்ற வித்தியாசமேன்? ஒருவனுக்கு ஒருத்தி என்ற இலக்கணம் ஏன்? ஆணுக்குப் பண்பாடும் பெண்ணுக்கு கற்பும் அணிகலன் என்ற தத்துவம் ஏன்? இவைகளெல்லாம் பசிவந்திடப் பறந்துவிடுமென்றால் இந்த உலகை கரையில்லாமல் கத்திக்கொண்டிருக்கிறகடல் கொள்ளட்டும். பிறகாவது பண்பாடு கெடாத புதிய சமுதாயம் உண்டாகட்டும்!

அழகிக்கு மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கியது. கதவைப் படீரென்று சாத்திவிட்டு, உள்ளே போய் இரண்டு குவளைத் தண்ணீரைக் குடித்துவிட்டு, முகத்தில் முத்து முத்தாய் தேங்கியிருந்த வியர்வைத்துளிகளை சேலைத் தலைப்பால் துடைத்துக் கொண்டு "உஸ்" என்றபடியே தரையில் அமர்ந்தாள். வீட்டிற்கு எதிரேயிருந்த மணிக்கூண்டுக் கெடிகாரம் 'டாங் டாங்" என்று ஆறுமுறை ஒலித்து நின்றது. மாலைப் பொழுது மங்கிக்கொண்டிருந்தது. வீதி விளக்குகள் எரியத்தொடங்கின.

அழகி எழுந்து, மாக்கல்லுவிளக்கைத் துடைத்து ஏற்றி, மாடாக்குழியில் வைத்துவிட்டு, மேலே சுவற்றில் மாட்டப்பட்டிருந்த அரும்புமீசை இளைஞனொருவன் படத்திற்கு வணக்கம் செலுத்திவிட்டு, மீண்டும் வாசலில் வந்து நின்றாள்.

வீதியோரத்தில் வேகமாக நடந்து சென்றுகொண்டிருந்த, ஒரு வாலிபன் கையில் மடித்து வைத்துக் கொண்டிருந்த புத்தகத்திற்குள்ளிருந்து, நூறு ரூபாய் நோட்டுகள் அடங்கிய கட்டு ஒன்று அழகியின் காலடியில் பொத்தென்று வந்து விழுந்தது. அதைக் கவனியாமல் அவன் அவசரமாக நடந்துகொண்டிருந்தான். அழகி சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு நோட்டுக்கட்டை எடுத்தாள்.

"ஐயையோ, எவ்வளவு நோட்டுகள். வீட்டிற்கு சென்றவுடன் பணத்தைக் காணவிட்டால் என்ன பாடுபடுவார், எவ்வளவு குழப்பங்கள் ஏற்படும்! அழகி தன் நிலைமையை மறந்து அவன் பின்னே ஓடினாள்.

இந்தாங்க! இந்தாங்க!

அவன் நின்று திரும்பினான்.

"உங்க புத்தகத்திலிருந்து இந்த நோட்டுக் கட்டு"......! அவனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. கையிலிருந்த வானொலியைப் பிரித்துப் பார்த்தான். விரல்கள் நடுங்கின, ஒரு நிமிடத்தில் உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது. மயக்கம் வரும்போல் தெரிந்தது, சமாளித்துக்கொண்டான். நோட்டை வாங்கிக்கொண்டு அவளுக்கு வணக்கம் செலுத்தினான்.

"ரொம்ப நன்றி!" பரிதாபமாக அவளைப் பார்த்துச் சிரித்தான்.

"இப்படியா பணத்தை அஜாக்கிரதையாக வைத்துக்கொள்வது, வேறு

— 8ம் பக்கம் —

மயிலாடும் பாறை

தென்னரசு

அந்தக் கோச் வண்டியிலிருந்து நடுத்தர வயதுடைய மனிதர் ஒருவர் இறங்கிவந்தார். அவர் கைகளிலே தங்கக் காப்புகளை அணிந்திருந்தார். விரல்களில் மோதிரங்கள் ஜொலித்துக் கொண்டிருந்தன. அவரைப் பெரிய வியாபாரி என்று எண்ணிக்கொண்ட குமரப்பர் வேகமாக முகப்பிற்கு வந்து கரம்கூப்பி வரவேற்ருர். பிரபுக்களும், பெருந்தனக்காரர்களும் குழுமியுள்ள இடத்தில் தனக்கு அவ்வளவு பெரிய வரவேற்புக் கிடைக்குமென்று அவர் எதிர்பார்க்கவில்லை. வெட்கப்பட்ட அந்த விருந்தாளி மாளிகைக்குள் நுழையு முன்னரே குமரப்பருக்குத் தன்னை அறிமுகப்படுத்திக்கொள்ளத் துடித்தார்.

“நான்தான் ஆவுடையார் கோயில் கங்கைமுத்து நட்டுவனர். என்னுடைய சிஷ்யை திருமயம் ரஞ்சிதத்தை சரபோஜி மன்னர் முன்னிலையில் ஆட வைத்துப் பார்க்க வந்திருக்கிறேன். அதற்கு நீங்கள் அனுமதி வாங்கித்தர வேண்டும்” என்று அந்த விருந்தாளி குமரப்ரிடம் கேட்டுக்கொண்டார்.

“நல்லவேளை, விருந்து முடியப் போகும் நேரத்திலாவது வந்து சேர்ந்தீர்களே! அந்தப் பெண் வந்திருக்கிறதா?”–குமரப்பர் வாஞ்சையோடு கேட்டார்.

“அதோ குழந்தை வண்டியிலிருக்கிறது.” என்று கூறி கையைத் தட்டினர் நட்டுவனர். புகையை நீக்கிவரும் நிலவைப்போல், மெல்லிய திரையை விலக்கிக்கொண்டு ரஞ்சிதம் கோச்வண்டியைவிட்டு இறங்கி வந்தாள். அவள் தலையிலே ஒரு கட்டு மல்லிகைப்பூ இருந்தது. இனிய நாதத்தைக் கிளப்பும் சிறிய வெள்ளிமணிகளைக் கொண்ட சிலம்புகளைக் கால்களில் அணிந்திருந்தாள். மெல்லிய பூப்பாதத்தை எடுத்து வைத்து மிதந்துவந்தாள். ஒரு அடிக்கும் மற்றொரு அடிக்கும் இடைப்பட்ட நேரம் அவளுடைய நடையை நாட்டியமாக்கித் தாளம் பிடித்துக் கொடுத்தது. அன்னத்தைப்போல் நடக்கிருளா, அகம்பிடித்த குதிரைப்போல் நடக்கிருளா?–அப்படி இருந்தது அவள் நடை. தளுக்கி மினுக்கி நடந்தாள், தலையை உயர்த்தி நடந்தாள். விழிகளிலே கவர்ச்சி இருந்தது, மருட்சி இருந்தது. குறும்பும் நாணமும் வதனங்களின் நீரோட்டமும் அவளுடைய அழகைப் பன்மடங்காகப் பெருக்கிக் காட்டின. மானய், மயிலாய், மஞ்சுவிரட்டுக்காளையாய் மாளிகைக்குள் அவள் நுழைந்தாள். சீமான்களும், சீமாட்டிகளும் நிறைந்திருந்த அந்தச் சபாமண்டபத்தில், ரஞ்சிதம், மல்லிகைத் தோட்டத்தில் ரோஜா மலரைப்போல்–வெண்மணற் பரப்பில் செம்பவளச்சரத்தைப்போல் தனித்து விளங்கினள். சபை அவளை விழுங்க நினைத்தது. சரபோஜி அவளோடு பேசத் துடித்தான். சித்திரத்தைப்போல், பத்தரை மாற்றுத்தங்கத்தால் செய்த பதுமையைப்போல், நித்திரையில் வந்து நெஞ்சம் குலைக்கும் தேவகன்னியைப்போல் மண்டபத்தில் வந்து அமர்ந்திருக்கும் ரஞ்சிதத்தை–அவளின் அழகை–அங்க சிருஷ்டியை அரித்துத் தின்றுவிடுவதைப்போல் எரித்து அழித்து விடுவதைப்போல் அங்கு வந்திருந்த சீமான் வீட்டுப் பெண்கள் முறைத்து முறைத்துப் பார்த்தார்கள். ரஞ்சிதம் குனிந்த தலை நிமிரவில்லை. மணப்பெண்ணகத் தலை கவிழ்த்துக்கிடந்தாள். அருகிலே அவளது ஆசான் அங்கமுத்து அமர்ந்திருந்தார்.

குமரப்பர், எல்லோரையும் சரபோஜி மன்னருக்கு அறிமுகம்செய்து வைத்துக்கொண்டு வந்தார்.

“ரஞ்சி, ராஜா பக்கத்திலே வந்துவிட்டார், எழுந்து நில். அவரைச் சேவிக்க வேண்டும். கலைஞானச் சக்கரவர்த்தி அவர். எழுந்து நில் கண்ணு!” என்று கங்கைமுத்து நட்டுவனர் ரஞ்சிதத்தின் கன்னத்தைத் தொட்டு நிமிர்த்தினர்.

கங்கைமுத்து அவளைக் குழந்தையைப்போல் எண்ணியதால், பள்ளிச் சிறுமியைப்போல் நடத்தியதால் அவளது கன்னத்தை அவர் தொடும்போது ஒரு பெண்ணைத் தொடுகிரேம் என்ற உணர்ச்சி அவருக்கு இல்லை. ஆனல் அவரைப்போல் அப்படி ஒருமுறை அவளது கன்னத்தைத் தொடுவதற்கு அந்த மண்டபத்தில் எத்தனை பேர் துடித்தார்கள் தெரியுமா?

சரபோஜி எதிரிலே வந்துவிட்டார். குவிந்து கிடந்த பூவிதழ்கள் விரிந்து மலர்வதைப்போல் ரஞ்சிதம் நிமிர்ந்து பார்த்தாள். விழிகளை உயர்த்தி கரங்கூப்பி வணங்கினள்.

மன்னன் சிரித்தான். அது பவ்யமான சிரிப்பு. பரதநாட்டியக் கலையின் பாதாளம்வரை சென்றுவிட்டு வந்தவன் நான்–என்று சிரிப்பால் சொன்னனே என்னவோ–அப்படி நளியாமல் சிரித்தான் சரபோஜி.

“பெண்ணே!”

“உம்!”

“உன் பெயரை நான் அறியலாமா?”

“ரஞ்சிதம்!”

“ஊர்?”

“திருமயம்!”

“அரங்கேற்றம் ஆகிவிட்டதா?”

“இல்லை!”

“மகா ராஜாவின் சந்நிதானத்தில் ஆட வைக்கத்தான் குழந்தையை அழைத்து வந்திருக்கிறேன். நான் குரு. பெயர் கங்கைமுத்து. ஆவுடையார்கோயில்!”–என்று நட்டுவனர் குறுக்கிட்டார்.

“பயிற்சி முற்றுப்பெற்றுவிட்டதா? எத்தனை ஆண்டுகளாக பயிற்றுவிக்கிறீர்?”

“சிறுமியாக இருக்கும்போதே குழந்தை என்னிடம் வந்துவிட்டது. எனக்குத் தெரிந்த வித்தைகளெல்லாம் குழந்தைக்கும் தெரியும்”–நட்டுவனர் சொன்னர்.

மன்னன், ரஞ்சிதத்தின் பக்கம் திரும்பினர். அவளது கண்களிலே நீர் அரும்பி நின்றது. முகம் சிவந்து காணப்பட்டது. சரபோஜி அவளது தாடையைத் தொட்டு உயர்த்தினன்.

“ஏன் அழுகிருய்? பயப்படுகிருயா?”–மன்னன் அன்போடுகேட்டான்.

“இ...ல்...லை!” தயங்கித் தயங்கிப் பதில் சொன்னள் அவள்.

நட்டுவனர் குறுக்கிட்டார். அரங்கேற்றத்தைத் தன் தாயார் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லையே என்று அழுகிறது.

மன்னனல் அதற்கு ஆறுதல் கூற முடியவில்லை. “அழாதே பெண்ணே, உன்னுடைய கலையால், ஆட்டத்தால், அதனல் கிடைக்கும் புகழால் கடந்தவைகளை மறக்க முயற்சி செய்! என்னைப் பார்!... எத்தனையோ மன்னர்கள் மகுடம் சூட்டிக்கொள்கிருர்கள். நாட்டையாளுகிருர்கள். அவர்களுக்கெல்லாம் இல்லாத கலை உணர்வு எனக்கு மட்டும் ஏன் இருக்கிறது? நான் கலைஞனின் மகனு? கலை கற்றேனு? இல்லை. உன்னைப்போல் நானும் பந்தபாசத்தில் சிக்கித் தவித்தவன்தான். மகன் மண்ணுளுவதை மாதாபிதாக்கள் கண்டுகளிக்க முடியவில்லையே என்று நானும்தான் கண்ணீர் வடித்தேன். எங்கெங்கோ மருந்து தேடினேன். கிடைக்கவில்லை. ஒருமுறை தென்னட்டு நாட்டியத்தைக் காணும்பேறு எனக்குக்கிடைத்தது. நான் சிறையில் அனுபவித்த துன்பத்தை–தாய் தந்தையரைப்பிரிந்திருந்த வேதனையை அந்த ஆட்டம் மறக்கடித்தது. அதிலிருந்து எனக்கு

ஆட்டக்கலையென்றால் உயிர். கவலை வரும்போதெல்லாம் நாட்டியத்தைக் கண்டு கவலைகளை மறக்கிறேன். பெண்ணே, நீ அடல் கற்றவள். புகழும் செல்வமும் உன்னைத் தேடி வரும். கவலை மறந்து கலையைப் பரப்பு! அழாதே! அழுதால் கண் கலங்கும். இதயம் கசங்கும். அதனால் முதுமை விரையக்கூடும். வா! அரங்கத்தில் ஏறு! ஆடு! உன் ஆசான் பாடட்டும்!'' என்று அவளை கைப் பற்றி அழைத்து மேடையில் ஏற்றினான் சரபோஜி.

சரபோஜி ஆசனத்தில் அமர்ந்தான். சபை நிமிர்ந்து உட்கார்ந்தது. கங்கைமுத்து தாளத்தைக் கையிலெடுத்து மேளத்தைத் தட்டினார். தாம்...தித்...தா, தை...தத்...தை- என்று ரஞ்சிதம் அபிநயத்தைத் தொடங்கினாள். சபை குலுங்கியது. தஞ்சைப் பெருநிலத்தில் எத்தனையோ ஆட்டக்காரிகளின் ஆட்டங்களையெல்லாம் சரபோஜி கண்டிக்கிறான். புகழ்பெற்ற ஆசான்களின் சிஷ்யைகளெல்லாம் சரபோஜியின் அவையிலே ஆடியிருக்கிறார்கள். வர்ணம் பிடிக்கத் தெரிந்தவர்களுக்குப் பதம் பிடிக்கத் தெரிவதில்லை; பதத்தை அழகாகப் பிடித்துக்காட்டுகிறவர்கள் 'சப்தம்' பிடிக்கையில் கோட்டை விட்டுவிடுகிறார்கள். என்று அடிக்கடி கவலைப்படும் சரபோஜி ரஞ்சிதத்தின் ஆட்டத்தில் பம்பரமாய்ச் சுழன்று விட்டான்.

''பெண்ணே, ஜக்கினி ஆடத் தெரியுமா?''

''பேரணிகூடத் தெரியும் பிரபு!'' ஆடிக்கொண்டே அவள் சொன்னாள்.

''துருவ பதம்?''

துருவ பதம் என்ன, தேசி, நவ பாதம், குறவை எல்லாம் தெரியும்?- சிரித்துக்கொண்டே சொன்னாள். அவளுக்கு வெறி வந்துவிட்டது. சுருள் கத்தியை எடுத்து வீசினாள். சபை பிரமித்தது. மண்டபம் சுற்றுவதுபோல் அவளுக்குத் தெரிந்தது. சரபோஜி அயர்ந்துவிட்டான்.

''ரஞ்சிதம்!'' என்று கத்தினான் மன்னன்.

அவள் ஆட்டத்தை நிறுத்தவில்லை. திடீரென்று நிறுத்தினால் விழுந்துவிட நேரிடும் என்று அவளுக்குத் தெரியும்.

''ரஞ்சிதம்! போதும்! போதும்!'' என்று மன்னன் மறுபடியும் உரக்கக் கூவினான்.

ஆட்டத்தை நிறுத்த முயன்றாள். சுழன்றுகொண்டே அரங்கினின்று உருண்டாள். விழித்துப் பார்க்கும் போதுதான் அவள் குமரப்பரின் மடியிலே படுத்திருப்பது தெரிந்தது. எல்லோரும் அவளைச் சூழ்ந்துகொண்டார்கள். அவளுக்கு நெற்றியிலே லேசான காயம். கரங்களிலே சில கீறல்கள். ஆனால் ஏன் குமரப்பரின் கையிலே ரத்தம் வடிந்துகொண்டிருந்தது? சூழ்ந்திருந்தவர்கள் ரஞ்சிதத்திற்குத்தான் பலத்த ரத்தக்காயம் ஏற்பட்டுவிட்டது என்று கண் கலங்கினார்கள்.

கொஞ்ச நேரத்திற்குப் பிறகு ரஞ்சிதம் மயக்கம் தெளிந்து எழுந்தாள். கங்கைமுத்து நட்டுவனார் வெற்றிவேர் விசிறிகொண்டு அவளுக்கு விசிறினார். ஆனால் ரஞ்சிதம், மன்னரின் பாராட்டைக்கூடக் கவனிக்கவில்லை. காரணமில்லாமல் குமரப்பரின் கையிலே ஏன் ரத்தம் ஒழுகிறது? என்பதே அவள் உள்ளத்தில் உறுத்திக்கொண்டிருந்தது.

''அவருக்கென்ன கையெல்லாம் ரத்தம்?'' என்றாள்.

''எவருக்கு?'' என்று அலட்சியமாகக் கேட்டார் நட்டுவனார்.

எல்லோரும் குமரப்பரைச் சூழ்ந்தார்கள். ரத்தப் பெருக்கு நிற்கவில்லை. ரஞ்சிதம் அவரருகில் வந்தாள். அவர் முகத்தைப் பார்த்தாள். அவரும் பார்த்தார். அவளது முகத்திலே அனுதாபம் தெரிந்தது. அதை ஏற்றுக்கொண்டதைப்போல் அவர் பதிலுக்கு இளநகை புரிந்து ரத்தம் கொட்டிய கையைத் தூக்கிக் காண்பித்தார். ''ஐயோ!'' என்று பரிதாபத்தோடு கூவினாள் ரஞ்சிதம். ஆம், குமரப்பரின் இடது கையில் சுண்டு விரலையே காணோம்! துண்டிக்கப் பட்டுவிட்டது. அவளுக்கு உடம்பு சிலிர்த்தது. ஆவேசம் கொண்டு அவள் சுருள் கத்தியை வீசும் போது அவரது விரல் துண்டிக்கப் பட்டிருக்கிறது என்பதை அவள் உணர்ந்தாள். சபையில் இந்தக் கலவரம் ஒடுங்குவதற்கு ஒரு நாழிகையாகிவிட்டது.

மன்னன் சரபோஜி ரஞ்சிதத்தின் ஆட்டத்திலேயே இலயித்திருந்தான். நெளிவதுகூடத் தெரியாமல் ஊரும் பச்சைப்பாம்பைப்போல், புயலிலே சிக்கி அலைமோதும் விரிந்த வாழை இலையைப்போல் அவள் மண்டபத்



திலே அனுயாசமாக ஆடியதைக் கண்ட சரபோஜிக்கு அவளை எப்படிப் பாராட்டுவது என்றே தெரியவில்லை. சபையைப் பார்த்துப் பெருமூச்சு விட்டான. தன் கழுத்திலே அணிந்திருந்த விலையுயர்ந்த முத்துமாலை ஒன்றை அவளுக்குப் பரிசாக அளித்தான். ரஞ்சிதம் தலை தாழ்த்தி அந்தப் பரிசைப் பெற்றுக்கொண்டாள். அவள் பரிசைப் பெற்றுக்கொண்டு திரும்புகையில், ''பெண்ணே, இது என்பரிசல்ல; தஞ்சையின் ராஜாங்கப் பரிசு. எந்த நேரத்திலும் தஞ்சைப் பெருநிலத்தில் எந்த விழாவிலும் மரியாதை பெறுவதற்கு தகுதிபெற்றவள் என்பதற்கான அத்தாட்சி அந்த முத்து மாலை'' என்றான் சரபோஜி. முத்துப் பல் காட்டி மோகனப்புன்னகை வீசி மன்னரின் ராஜ மரியாதையை ஏற்றுக்கொண்டாள். ரஞ்சிதம். பரிசைப் பெற்றுக்கொண்டு படிகளை விட்டு இறங்குகையில் அவளது விழிகள் பரபரவென்று சிதறி ஒரு கணத்தில் குறிவைத்து நின்றன. அந்தக் குறி, சபையில் பிரபுக்களின் வரிசையில் பட்டுப்பீதாம்பரத்தோடு அமர்ந்திருந்த குமரப்பரைத்தான் பாய்ந்தது.

★

ஆடற்கலையால் ரஞ்சிதம் மணம் பெற்றாள். புகழ்பெற்றாள். பொருள் குவித்தாள். தமிழகிலம் அவளது ஆடலைக் காணத் தவித்துப் புலம்பியது. ரஞ்சிதத்தின் ஆட்டத்திற்கு கலையுணர்ந்த மக்கள் மத்தியில் அபரிமிதமான மரியாதை வளர்ந்தது.

ஜமீன் மாளிகைகளிலே ஆடினாள். சமஸ்தானாதிபதிகளின் முன்னிலையில் ஆடினாள். கல்யாண மண்டபங்களிலே ஆடினாள். கலையரங்கங்களில் ஆடினாள். அழகிகளின் தரிசனங்களுக்குப் பரந்து திரியும் வாலிபர்களின் இதயங்களிலெல்லாம் ரஞ்சிதம் ஆடினாள். ஆனால் அவள் இதயத்திலே ஆடியது யார்? அன் பொழுகப் பேசி, ஆட்டப்பிரியன் சரபோஜியின் முன்னிலையில் ஆடிக் காட்டி புகழ்க்கொடி நாட்ட உற்ற துணைபுரிந்த குமரப்பர். அவள் உள்ளத்தில் ஆடினார். அவள் மற்றவர்களுக்கு நிலவாக ஒளி சிந்தினாள், நட்சத்திரமாக மின்னினாள், தேனருவியாகத் தோன்றினாள். ஆனால் அவள் மற்றவர்களைக் காணும்போதெல்லாம் குமரப்பரையே எண்ணிக்கொண்டாள். அவரது நினைவு வரும்போதெல்லாம் தன்னுடைய சுண்டி விரலைப் பார்த்துக்கொண்டாள். பத்தாண்டு காலமாக பயிற்சி பெற்று அரங்கேற்ற நாளன்று தன் ஆட்டம் ரத்தப்பலி கொண்டுவிட்டதே என்று அவள் அடிக்கடி விசனப்பட்டாள். அதற்காகக் குமரப்பரிடம் மன்னிப்புக்கூடக் கேட்கவில்லையே! அவர் யார்? எந்த ஊர்? இப்படி அவள் நினைத்து நினைத்து கண்ணீர் வடித்திருக்கிறாள்.

தன்னுடைய மன நிலையை கங்கைமுத்து நட்டுவனாரிடம் துணிந்து கூறிவிடுவது என்றுகூட அவள் தன் உள்ளத்தைப் பல தடவை தெம்புப்படுத்திக்கொண்டிருக்கிறாள். ஆனால் அவரைக் காணும்போது அந்தத் துணிவு காற்றாய் பறந்து விடுகிறதே என்ன செய்வது? பேசத் தெரிந்த நாள் முதல் கங்கைமுத்துவின் வளர்ப்புக் குழந்தையாக அவள் வாழ்ந்து வருகிறாள், அவளுடைய அன்னை-செட்டி

விரைவில்!

இவர்தான்

எம். ஜி. ஆர்.!

ராஜம்-மணாளன்

எழுதுகிறார்.

நாட்டில் பேரும் புகழும் பெற்ற தாசி செங்கமலத்திற்குக்கூட அவர்தான் ஆசான் என்றால், ரஞ்சிதம் அவரிடம் பயப்படாமல் இருக்கமுடியுமா?

''என்னுடைய ரஞ்சிதத்தை மணம் செய்துகொள்ள இந்தப் பகுதியிலே ஆள் இல்லை; ஒரு ராஜகுமாரன்தான் அவளுக்கு ஏற்றவன்''-என்றுகங்கைமுத்து பலமுறை அவளது காதில் படும்படி பேசியிருக்கிறார். இப்படியிருக்கும்போது எப்படிக் கேட்பாள் குமரப்பரைப்பற்றி! இள நெஞ்சு! பிரேமைக்கும், கண்ணில் படும் அழகிய தோற்றங்களுக்கும் எளிதில் இளகும் வாலிபப் பருவம்! ரஞ்சிதம் உள்ளுக்குள்ளேயே வெதும்பிச் செத்தாள்.

வெய்யிலை விரும்பும்போது மனிதர்கள் மழையை விரும்புவதில்லை. மழை அவசியப்படும்போது அவர்களுக்கு வெய்யில் கடுமையாகத் தெரிகிறது. ரஞ்சிதத்திற்கு மல்லிகைப்பூ, என்றால் உயிர். தலையிலே வாங்கிக் கட்டிக் கொள்வாள். படுக்கையில் தூவி விடுவாள். படங்களுக்கெல்லாம் மல்லிகை மாலையே போடுவாள். ஆனால் அந்த அரங்கேற்றத்திற்குப் பிறகு அவள் மல்லிகையே வைத்துக்கொள்வதில்லை.

ஏனென்றால் அன்றையத்தினம் மல்லிகைதான் சூடியிருந்தாளாம். அதன் பிறகு அந்த மல்லிகையைப் பார்த்தாளே அந்த அரங்கேற்றமும், குமரப்பரின் நினைவும் வந்து அவளது இதயத்தைத் துளைக்கிறதாம். அதனால் அவள் மல்லிகையைச் சூடிக்கொள்வதில்லை என்று முடிவு செய்துவிட்டாளாம். இந்த முடிவைக் கங்கைமுத்து எப்படி அறிவார்? ஒருநாள் அவர் ஒருபந்து மல்லிகைப் பூவைச் சுமந்துகொண்டு மகிழ்ச்சியோடு வீட்டுக்குள் புகுந்தார்.

''ரஞ்சி, மல்லிகைப்பூ! நீ சூடிக்கொண்டு வெகு நாளாச்சே! இந்தா தலைநிறைய வைத்துக்கொள்!'' என்றார்.

''மல்லிகைப்பூவா?...உஹூம்! நான் மாட்டேன். அது இப்போது எனக்கு ஜன்ம விரோதி!''

''அட பைத்தியமே! மல்லிகைப் பூவுக்கும் உனக்கும் என்ன?''

''பகை இருப்பதால்தான் நான் வேண்டாம் என்கிறேன்'' என்று தளதளத்த குரலில் கூறினாள்.

''ரஞ்சிதம்! ரஞ்சிதம்!! இது யார் வாங்கி வந்தது தெரியுமா?''

(தொடரும்)

—5-ம் பக்கத் தொடர்ச்சி—

யாராவது எடுத்திருந்தால்...? அவள் தரையைப் பார்த்துக்கொண்டே பேசினாள்.

"வீட்டில் பிரசவம். ரொம்ப அவசரம், அதுதான் கவனிக்கவேயில்லே! உங்க வீடு எங்கேயிருக்கு.

"இதே வரிசையில் ஆறாவது வீடு"

இந்தாங்க, இதை வச்சிக்கிங்க, நான் வர்ரேன், என்று அவள்கையில் ஒரு நூறு ரூபாய் நோட்டைக் கொடுத்துவிட்டு, அவன் வேகமாக நடந்தான்.

அழகிக்கு அவனைநினைக்க,நினைக்க பரிதாபமாக இருந்தது. எப்பொழுதும் படுத்தவுடன் தூங்கிவிடுபவள் அன்று பனிரெண்டு மணிவரை தூங்கவில்லை. புரண்டு புரண்டு படுத்தாள். மணிக்கூண்டுக் கெடிகாரம் மணி இரண்டு என்று அறிவித்தது. அழகி தன்னை மறந்து தூங்கினாள். நினைவு கனவாகியது, கனவில் புதிய கதை பிறந்தது. அவன் வந்தான், சிரித்தான், பேசினான், அவள் சிலையாக நின்றாள். பின், வெள்ளத்தோடொரு வெள்ளமுமாய், வீணையும், நாதமும் ஆகினர்.

பொழுது விடிந்தது. அழகி வேலைகளை முடித்துவிட்டு, கிழிந்து போன ரவிக்கையை தைத்துக்கொண்டிருந்தாள். யாரோ கதவைத் திறக்கும் சப்தம் கேட்டு நிமிர்ந்து பார்த்தாள். அவன் சிரித்தபடியே வந்து நின்றான். அழகி அடக்க ஒடுக்கமாக எழுந்து நின்றாள்.

"நேற்று ரொம்ப அவசரம், அதுதான் என் மகிழ்ச்சியை உங்களுக்கு சரியாகத் தெரிவிக்கமுடியவில்லை. அந்த ரூபாய்மட்டும் கிடைக்காமலே போயிருந்தால் என் இருதயம்நின்றே போயிருக்கும்" அவன் நின்று கொண்டே பேசினான்.

"உட்காருங்கள்" அழகி பாயை எடுத்து விரித்தாள்.

பாயில் அமர்ந்தபடியே, வீட்டை ஒருமுறை சுற்றிப் பார்த்தான். பாத்திரங்கள் துணிமணிகள் எதுவும்பரப்பிக் கிடக்கவில்லை. வீடு விதவையைப் போல், வெறிச்சென்றிருந்தது.

"இந்தாங்க" அழகி ஒரு நூறு ரூபாய் நோட்டை அவனிடம் நீட்டினாள்.

"இதை உங்களுக்குதான் பரிசாகத்தான் தந்தேன்." வைத்துக் கொள்ளுங்கள்.

"வேண்டாம். உங்கள் பணத்தைத்தானே நான் எடுத்துக்கொடுத்தேன், அதற்கு இவ்வளவு ரூபாய் எதற்கு?

"வீதியில் கிடந்தால் எல்லோரும் எடுப்பார்கள். ஆனால், தேடிக் கொடுப்பவர்கள் உங்களைப்போல் நூற்றுக்கு ஒருவர்தான் இருக்கமுடியும். நீங்கள் கடமையைச் செய்தீர்கள், அதற்கு நான் தன்மையோடு நடந்துகொள்ளவேண்டாமா? அவன் அவளையே பார்த்தான்.

அழகி நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். இமைகள் படபடத்தன. விழி பட்டுத் தெரித்தது. கரையை நோக்கி வரும் அலையைப்போல் நெஞ்சு விம்மி எழுந்தது. மணிக்கூண்டுக் கெடிகாரம், பத்தடித்தது. அவன் தன் கைக்கெடிகாரத்தைப் பார்த்துக்கொண்டே எழுந்தான்.

"கல்லூரிக்கு நேரமாகிவிட்டது. நாளை வருகிறேன்" என்று சொல்லிவிட்டு, சுவற்றிலே மாட்டியிருந்த இளைஞனின் படத்தையும், அழகியின் கழுத்தையும் மாறி மாறிப் பார்த்துவிட்டு, வெளியேறினான்.

அழகி வெளியே வந்து அவன் தலை மறையும்வரை பார்த்துக் கொண்டே நின்றாள். ராணுவ வீரனைப் போல் மிடுக்கான நடை. அழகான முகம். களங்கமில்லாத பேச்சு. கனவில் வந்து குறும்புத்தனம் செய்தவர், வாழ்கையிலும்...! சேச்சே அவருக்குத்தான் கல்யாணமாகி ஒரு குழந்தைகூட பிறந்துவிட்டதே! எவ்வளவு பெரிய தவறு செய்ய இருந்தோம். அழகி வருந்தினாள். எண்ண அலைகளுக்கு கரை போட்டாள். இருந்தாலும், விளையாடும்பொழுது நடந்த நிகழ்ச்சிகளை தூக்கத்திலே நினைந்து பிதற்றும் குழந்தையைப் போல், அழகியும் புலம்பினாள்! பாவம் அவளும் குழந்தை தானே?

கல்லூரிக்கு வந்ததும், ராஜனுக்கு பாடத்தில் கவனம் செல்லவில்லை. சதா அவளைப் பற்றியே நினைவுகள். உள்ளத்து ரகசியங்களை உயிர் நண்பர்களிடம் சொன்னால்தான், மனதிலுள்ள பாரம் குறைகிறது. நிம்மதி ஏற்படுகிறது. அவனும் தன் நண்பன் ராமதாசிடம் நடந்தவைகளைச் சொன்னான்.

"அழகாக இருக்கிறாள். பாவம் தாலியிழந்த கழுத்தோடு தனியாக வாடுகிறாள். காலம் அவளை விதவையாக்கிவிட்டது. படத்திலுள்ள அரும்பு மீசை இளைஞனும் அழகாகத்தான் இருக்கிறான். இந்த வயதில் எப்படி இறந்தான் என்று தெரியவில்லை. ஒரு வேளை காசநோயாக இருக்கலாம். படத்தைப் பார்த்தால் அப்படித்தான் தெரிகிறது. கல்யாணமானதும் நோய் முற்றியிருக்கும். திடீரென்று இறந்திருப்பான்"! என்று பெரிய மனோதத்துவ ஞானியைப் போல் ராஜன் மடமடவென்று பேசினான். ராமதாஸ் வந்த சிரிப்பை அடக்கிக்கொண்டான். இந்தச் சமயத்தில் அங்கு தமிழாசிரியர் வரவே அவர்கள் பிரிந்து சென்றனர்.



கல்லூரி விட்டதும் வழக்கம்போல் நண்பர்களுடன் கடற்கரைக்கு சென்றுவிட்டு, நேராக அழகியின் வீட்டிற்கு வந்தான். அழகி விளக்கேற்றி வைத்துவிட்டு, இளைஞனின் படத்திற்குமுன்னால் நின்று வணங்கிக் கொண்டிருந்தாள். உள்ளே நுழைந்தவன் அமைதியாக நின்றான். "கணவன்மேல் எவ்வளவு அன்பு. அவன் இறந்த பிறகும்கூட இவள் அவனை மறக்கவில்லையே! இவ்வளவு பதி பக்தியுடையவள்.நம் திருமணத்திற்கு சம்மதிப்பாளா? திடீரென்று அவனுக்குக் கவலை பிறந்தது. அழகி வணக்கத்தை முடித்துவிட்டுத் திரும்பினாள்.

"வாருங்கள். பாலைக்குடிக்கவரும் திருட்டுப்பூனைதான் ஓசைப் படாமல் வரும் என்பார்கள், தாங்கள்..."!

"நானும் அப்படித்தான்" அவன் சிரித்துக்கொண்டே பதில் சொன்னான். அழகி பேச்சை மாற்றினாள்.

"குழந்தை பிறந்ததைப் பற்றிச் சொல்லவே இல்லையே! குழந்தையும், தாயும் சௌக்கியமா?

"இருவரும் சௌக்கியமாக இருக்கிறார்கள்"

"குழந்தை ஆணா, பெண்ணா?"

"பெண்"

"பெண்ணுக்கு பெயர் என்ன வைத்திருக்கிறீர்கள்?"

"நான் ஏன் வைக்கிறேன். குழந்தையைப் பெற்றவர்கள் வைப்பார்கள்"

அழகிக்கு ஒன்றும் புரியவில்லை. 'அப்படியானால் குழந்தை!' எதையோ கேட்பதற்கு அவள் தயங்கினாள். ராஜனுக்கு அது புரிந்துவிட்டது. அவன் சொன்னான்.

"எனக்கு இன்னும் திருமணமே ஆகவில்லை! அன்று மருந்து வாங்கிச் சென்றது. என் தங்கையின் பிரசவத்திற்கு! குழந்தைக்கு அவர்கள் தானே பெயர் வைக்க வேண்டும்" அழகி என்ன சொல்லப் போகிறாள் என்பதையே அவன் கவனித்துக் கொண்டிருந்தான்.

அழகிக்கு அளவில்லாத மகிழ்ச்சி! காணமற் போன குழந்தை கிடைக்காது என்று கவலைப்பட்டுக்கொண்டிருக்கும்பொழுது அது, தானாக "அம்மா" என்று ஓடி வந்தால் பெற்றவர்களுக்கு ஏற்படுகிற மகிழ்ச்சியைவிட அவளுக்கு அதிகமாயிருந்தது. அழகி உள்ளே ஓடிப் போய் ஒரு லோட்டாவில் காப்பி கொண்டு வந்து அவனிடம் நீட்டினாள். அவன் அதை வாங்கி ஒரு வாய் குடித்துவிட்டு கேட்டான்.

"நீங்கள் உங்கள் பெயரைச் சொல்லவே இல்லையே?"

"சொல்லுகிறேன். முதலில் என்னை இந்த "நீங்கள்" போட்டு அழைப்பதை விட்டுவிடுங்கள். உங்களைவிட நான் வயதில் சிறியவள்தானே'

"ம்...உன் பெயர்!"

"அழகி!"

"நான், பெயரைக் கேட்கிறேன்"

"நானும் பெயரைத்தானே சொல்லுகிறேன்"

"ஓகோ! பெயர்கூட அழகிதானா? பொருத்தமாக வைத்திருக்கிறார்கள். அழகி, ஒன்று கேட்கிறேன் மறுக்காமல் பதில் சொல்லுகிறாயா?

"ம்..."

"உனக்கு மறுபடியும் திருமணம் செய்துகொள்ளப் பிரியமா?

"மறுபடியுமா? என்ன புதிர்போடுகிறீர்கள். புரியும்படி சொல்லுங்கள். எனக்கு இன்னும்...

அவன் குறுக்கே பேசினான். "மறைக்காதே அழகி எல்லாம் எனக்குத் தெரியும். நீ, விதவை! இருந்தாலும் கணவன் மேலுள்ள அன்பு குறையாமல் அவர் படத்திற்கு மரியாதை செலுத்தியதை நான் பார்த்துக்கொண்டுதானே இருந்தேன்.

'போதும் நிறுத்துங்கள். அந்தப் படத்திலிருப்பவர் என் அண்ணன். என்மேல் உயிரையே வைத்திருந்தவர். இரண்டு வருடத்திற்கு முன்பு ரயில் விபத்தில் இறந்து போனார். அழகி விம்மி விம்மி அழுதாள்.

ராஜன் அழகியின்கைகளைப்பிடித்து தன் அருகே அழைத்து உட்கார வைத்துக்கொண்டு அவள் கண்ணீரைத் துடைத்தான்.

"அழாதே அழகி. உனக்குத் திருமணம் ஆகவில்லையென்பதில்எனக்கு எவ்வளவு மகிழ்ச்சி தெரியுமா? மைத்துனரே உங்கள் தங்கையை அழாமல் இருக்கச் சொல்லுங்கள்" என்று சிரித்துக் கொண்டே சுவற்றில் மாட்டியிருந்த படத்தைப் பார்த்துப் பேசினான்.

அழகிக்கு இதயம் குளிர்ந்தது. ராஜனின் கைகளைப் பிடித்து தன் கண்களில் ஒத்திக்கொண்டாள். பின் ஈரத் துணிபோல அவன் மார்பில் ஒட்டிக்கொண்டாள்.

ராஜனுக்கு கல்லூரிப் படிப்பு முடிந்தது. டாக்டர் பட்டம் கிடைத்தது. அழகிக்கும் அவனுக்கும் கொட்டு முழக்கோடு சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது. அழகியையே உரித்து வைத்தாற்போல் ஒரு பெண் குழந்தையும் பிறந்தது. ஒருநாள் அழகி தன் குழந்தையோடு கொஞ்சிப் பேசிக்கொண்டிருந்தாள்.

"அம்மா தாயே! பசியாயிருக்கு கொஞ்சம் சோறு போடுங்கம்மா' வெளியிலிருந்து ஒரு ஈனக்குரல் கேட்டது. அழகி ஒரு தட்டில் சோறு எடுத்துக்கொண்டு வெளியே வந்தாள். குஷ்டம் பிடித்த ஒரு பெண். உடம்பெல்லாம் சீழ் வடிய, பரிதாபமாக கையேந்தியபடி நின்றுகொண்டிருந்தாள். அழகிக்கு அவளை எங்கோ பார்த்ததாக நினைவு. கொண்டு வந்ததைப் போட்டு அவளை அனுப்பினாள் அழகிக்கு அவள் யார்என்பது இப்பொழுதுதெரிந்தது. அதேகாஞ்சிபுரம் கண்டாங்கி, வெல்வெட் ரவிக்கை, அவைகள் அவளைப்போலவே நைந்துபோயிருந்தன. வாலிபத்தை பொதுவுடைமையாக்கித் திரிந்தவள்ளி, முறையோடு வாழ்க்கைக்கு ஒருவனை துணையாகத் தேர்ந்தெடுத்துக்கொள்ளாமல், கண்டதே காட்சியாய், கொண்டதே கோலமாய் திரிந்து வாழ்க்கையை இருளாக்கிக் கொண்டிருக்கிறாள் என்பதை நினைக்கும்போது அழகியின் மனம் அவளுக்காக வருந்தியது. கண்களில் நீர் துளிர்த்தது.

அம்மா, மல்லிகைப்பூ வேணுங்களா? பூக்காரன் அழகியின் சிந்தனையைக் கலைத்தான். பூவை வாங்கி தலைநிறைய வைத்துக்கொண்டு, தவழ்ந்து கொண்டிருந்த குழந்தையைத் தூக்கி மார்போடு அணைத்து மாறி மாறி முத்தம் கொடுத்தாள்.

"குழந்தைக்கு மட்டும்தானா எனக்கில்லையா அழகி" என்று சிரித்துக் கொண்டே வந்தான் ராஜன்.

"எதுவும் நேரத்தோடுதான் டாக்டர் கிடைக்கும்" அவள் குழந்தைக்கு இன்னொரு முத்தம் கொடுத்தாள்.

"இப்பொழுது என்னவாம்! ராஜன் அழகியின் சடையைப் பற்றினான். அவள் குழந்தையை தரையில் தவழ விட்டு விட்டு உள்ளே ஓடினாள்.

அவன் தொடர்ந்தான்.

......ச்சு.

வெளியிலிருந்த குழந்தை தன் கன்னத்தில் ஒட்டியிருந்த எச்சிலைத் துடைத்துக்கொண்டு கைகொட்டிச் சிரித்தது.

-தேவகோட்டை தினகரன்.

தசரத ராஜகுமாரனும்

தமிழ் நாட்டுக் கம்யூனிஸ்டுகளும்!

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தவறுகள் செய்வதில் தன் நிகரற்றது, கொள்கைகளில் இங்கும் அங்குமாக இடறி வீழ்வதில் இணையற்றது என்பதை சென்ற கட்டுரையில் கூறப்பட்ட சில சான்றுகள் விளக்கின. இருந்தாலும் இந்திய உபகண்டத்து மக்கள் அனைவரும் இந்தக் கட்சியைத்தான் வழிகாட்டியாகக் கொள்ளவேண்டும், அதனுடைய இலட்சியங்களைத்தான் அவர்தம் இதயங்களிலே நிறைத்துக்கொள்ள வேண்டும், இல்லையேல் இந்த நெருக்கடியான காலக் கட்டத்தில் இந்த நாட்டு மக்களுக்கு வகையான வாழ்வில்லை; வளமில்லை என்றெல்லாம் அமிர்தசரஸ் வகுத்த வழியிலே சென்றுகொண்டிருக்கும் கம்யூனிஸ்டுகள் தங்களுடைய அறிக்கைகளை வெளியிட்டுக்கொண்டுள்ளார்கள். மார்க்ஸிச-லெனினிசப் பாதையில் தங்களுக்குள்ள நம்பிக்கையைப் பெரிதும் புகழ்ந்து பேசிக்கொள்ளும் கம்யூனிஸ்டுகள் இந்தத் தத்துவங்களையே கட்சியின் எழிலுக்குத் துணையாக வைத்திருக்கிறார்களா என்று எவரேனும் ஆய்ந்து பார்த்தால் இல்லையென்பதை எளிதில் உணர்ந்துகொள்வார்கள். இந்திய உபகண்டத்து மத ஆதிக்கத்தினின்றும் மக்களை விடுவித்து அதன்பின் மக்களிடத்திலே விளையும் மறுமலர்ச்சியை மார்க்சிய வளர்ச்சிக்குப் பயன்படுத்த விரும்பவில்லை. மாறாக மதப்பற்றும் மாயையும் இருந்தால்தான் தங்களுடைய கட்சியை மக்கள் மதிப்பார்கள் என்ற மனப்பான்மையும் கம்யூனிஸ்டுகளுக்கு உண்டு. எனவேதான் மதவெறியைக் கண்டிப்பதும், கொடுமைகளைக் கூறுவதும், மார்க்சுக்குப் பங்கம்தரும் செயலென்று எண்ணிக்கொண்டுள்ளார்கள். மதத்தைப் பற்றி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்துக்கு ஆதாரமாக பின்வரும் குறிப்பு இருக்கிறது. "மதப்பிரச்சினையைப் பொறுத்த மட்டில் மதப்பற்று மக்களின் இயக்கத்தை எந்த அளவுக்குப் பாதிக்கிறது என்பதைக் கவனித்து வரவேண்டும். அதை உணர்ந்து அதற்கு மதிப்புக் கொடுத்து கட்சி வேலைகளில் எல்லா மதத்தினரும் ஈடுபடும்படி நடந்துகொள்வது மதத்திற்கு வால் பிடிக்கும்படிக் கூறும் கொள்கையாகாது. மதப்பிரச்சினையில் கம்யூனிஸ்டுக்கு கடவுள் வழிபாடு இருக்கலாம். கம்யூனிஸ்டுகள் குறுக்கிடுவதும் குறுக்கிடாமல் இருப்பதும் கட்சி இயங்கும் வட்டாரத்தைப் பொறுத்தே நிர்ணயிக்க வேண்டும். இது ஒருக்காலும் சந்தர்ப்பவாதமாகாது என்பதைக் கம்யூனிஸ்டுகள் மத விரோதிகள் என்போர் உணரவேண்டும்." 1947 ஜனவரி 23 லிருந்து ஆகஸ்ட் 15 வரையில் மாகாண கம்யூனிஸ்டுகள் வேலூர் சிறையில் அடைபட்டிருந்த போது, அவர்களுக்கு கட்சித் தலைவர்களால் நடத்தப்பட்ட அரசியல் வகுப்புகளின் குறிப்புகளில் இந்தக் கருத்துக்களைக் காணலாம். கம்யூனிஸ்ட் கட்சியின் பனிரெண்டாவது வகுப்பு மார்க்சிய போதனைகளைப் பற்றிய மூன்றாவது புத்தகத்தை 'ஜனசக்தி' 1948 மார்ச் மாதத்தில் வெளியிட்டது. கம்யூனிஸ்டுகள் வளர்ந்துவரும் மதவெறிக்கு எப்படி இரையாகியிருக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ளப் பெரிதும் உதவியாக இருக்கிறது.

இந்தியக் கம்யூனிஸ்டுகள் மதத்தைப்பற்றி ஒரே மாதிரியான கொள்கையை எல்லாக் கால கட்டத்திலும் வைத்திருக்கிறார்கள் என்பதற்குச் சரியான சான்று இல்லை. வடநாட்டிலேயிருக்கின்ற கம்யூனிஸ்டுத் தலைவர்கள் தென்னாட்டிலேயுள்ள வர்க்கப் பிரிவுகளை நீக்கிவிடவும்-கட்சியின் பிடிப்பிலிருந்து விலகிக் கொள்ளவும் வழி காட்டியதில்லை. தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்டுகள் இராம காதையைப் பெரிதும் புகழ்கிறார்கள். அந்தக் கதையைத்தான் தலைசிறந்த இலக்கியமாக மதிக்கிறார்கள். கம்பனது காவியம் கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்தோட்டத்தில் கண்ணியத்திற்கு ஏற்றதென்றால்-அந்தக் காவியத்தைப்பற்றி கட்சியின் தலைவர்கள் ஒரே கருத்தை வைத்திருக்கிறார்களா? இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் வரலாற்றில் என்றாவது பி. ஸி. ஜோஸி; ரணதிவே- அஜய்கோஷ்- டாங்கே- இவர்கள் கம்பனைப்பற்றிப் பேசியதுண்டா? ஆனால் தோழர் ஜீவானந்தம்மட்டும் இராமனை ஆண்டவன் அவதாரமாக்கி கம்பன் தரும் காவியத்தைப்பற்றிப் பேசுவதும்-ஊர் ஊராகச் சென்று மக்களிடையே விளக்குவதும் தன் கடமையென்று கருதுகின்றார். இராமனுடைய கதை கற்பனைக்கு அப்பாற்பட்டதென்று, கம்யூனிஸ்டுகள், உண்மையில் காரல்மார்க்சின் தத்துவங்களின் அடிப்படையில் நின்று பணியாற்றுவது சரியென்றால்-துணிந்து ஒதுக்கித் தள்ள வேண்டும். அகில இந்தியாவுக்கும் ஒரே கட்சியாக இருப்பவர்கள் ஏன் இந்தக் கம்பன் பிரச்சினையில் ஒன்றாக இல்லை! கம்பன் காட்டும் காவியப் பாதையையும் அதன் எழிலையும்-மிதிலைச் செல்வியின் மேனி யழகைப் படம் பிடித்துக் காட்டும் பண்பையும் தோழர் ஜீவானந்தம் பாராட்டுகிறார். லெனினும் மார்க்சும்-ஏங்கல்சும்-கம்பனும் ஒரே அணியில் கொண்டு வரப்படுகிறார்கள். இந்த இரண்டு பாதையில் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைப் பீடம் எந்தப் பாதை சரியென்கிறது? ரணதிவே, டாங்கே வட்டாரம் வேறு-ஜீவானந்தம்-மார்க்சிய லெனினிசப் பார்வைக்கு கம்பனும்-அவனது காவிய தலைவியும் துணையாவது வேறு-என்பதுதான் தெரிந்த உண்மையாகும். தமிழ்நாட்டுக் கமிட்டியிலே கூட தோழர் ராமமூர்த்தி-கம்பனைப் பற்றியும்- வள்ளுவனைப்பற்றியும்-பாரதியாரைப்பற்றியும் சிறப்புத் தலைப்புகளிலே புகழுரைகள் தந்தார் என்பதற்கு இன்றுவரையிலும் ஆதாரம் இல்லை! ஆனால் கம்பன் காவியத்திலே மார்க்சின் தத்துவங்கள் இழையோடியிருப்பதாக இயம்புகின்ற 'இலக்கிய மேதை'யெனும் ஜீவாக்கள் ஏன் தங்கள் கட்சியின் பெருந் தலைவர்களின் கருத்தைக் கவராத கம்பன் பிரச்சினையில் காலத்தை ஓட்டுகிறார்கள்? ஒரே கட்சியின் எல்லாத் தலைவர்களும் சங்க இலக்கியப் பண்புக்கு இணைந்து வராமல் எங்கெங்கோ சிதறிக் கிடப்பதேன்?

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வழிகாட்டியாக இருக்கும் ருஷியப் புரட்சிகள்-அவைகளைப் பற்றிய வரலாறுகள் - கோழையை வீரனாக்கி, புழுவையும் போரிடத் தூண்டும் வீரகாவியங்கள். ஆனால் கம்யூனிஸ்டுகளின் கள்ளக்காதலனாக கம்பன் வந்து நிற்கிறான். காரல் மார்க்சும்-கார்க்கியும் இருக்குமிடத்திலே லெனினது போராட்டமும் வெற்றியும், சதுப்பு நிலக்காடுகளில் சவக்குழிகளும் அங்கே சைபீரியப் பனி வெளியில் புதையுண்ட பிணங்களும்-நம்மால் மறக்கமுடியாதவை. ஆனால் இவைகளையெல்லாம் இந்தியப் புரட்சிக்கு முன்னோடிகளாகக் கொண்டிருக்கும் முற்போக்கு வாதிகள் இராமன் கல்பட்டுத் தோன்றிய அகலிகையும், அவள் இந்திரனோடு கூடிக் குலாவியதையும் வர்ணிக்கின்ற கம்பன் காவியத்தைத் தூக்கித் திரிவதும் தங்களது பணிகளிலே ஒன்றாக்கிவிட்டார்கள்! ஜீவானந்தத்தின் இலக்கியப் பார்வையில் கம்பன் வணங்கத் தக்கவனாகவும்-போற்றலுக்குரியவனாகவும் இருக்கிறான். ஆனால் டாங்கேயும் ஹீரேன் முகர்ச்சியும்-அதிகாரியும்-லெனினை அழைத்து வருகிறார்கள். கம்பனைப் புகழ்வது அவனது காவியத்தைப் போற்றுவது அதனுள்ளே மறைந்துகிடக்கும் கருத்துக்களை ஏற்றுக்கொள்வதுதான் ஜீவானந்தம் போன்றவர்களின் மார்க்சியப் பண்பு - அறுதியிட்டுக் கூறும் திறனிருந்தால் மார்க்ஸ் வேண்டாம்-கம்பன் போதும் என்று அவனது தாசர்கள் தெரிவிக்க வேண்டும். கம்யூனிஸ்டுகளைப்பற்றி ஒரு நல்ல தீர்ப்பு நல்குவதற்கு அது உதவியாக இருக்கும்! மதத்தை மதிக்காத மார்க்சையும் - மத அடிப்படையிலே உருவாக்கப்பட்ட கம்பனது கதையையும் இரு கைகளிலே ஏந்தி - புதிய பாகவதர்களாக இரட்டை நாக்கிலே பேசுவது புரட்சி மனப்பான்மையிலே வளரும் ஒரு கட்சியின் மாட்சிக்கு அழகல்ல! மதத்தைப் பற்றியும் மதம் வளர்க்கும் இலக்கியத்தைப் பற்றியும் கம்யூனிஸ்டுகளுக்கு வேறுபாடும் முரண்பாடும் கொண்ட தன்மை நிறைந்துள்ளதென்பதை அந்தக் கட்சியினுடைய கொள்கை அமைப்புகள் எந்தக் காலத்திலும் விளக்கியதில்லை. ஜீவானந்தம் - கம்பன் காவியத்தைப் புகழ்ந்தால்-அஜய்கோசும்-டாங்கேயும் - துளசிதாசர் ராமாயணத்தையாவது மதிக்கிறார்களா? 'நியூஏஜ்' பத்திரிகையில் எழுதுகிறார்களா? இல்லவேயில்லை! அவர்களுடைய இலக்கிய அறிவு "பண்டைக்கால இந்தியா" வைக் காட்டுகிறது. தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்டுகளிலே சிலர் மட்டும்தான் கம்பதாசர்களாகக் காட்சியளிக்கிறார்கள். இதனால் கம்யூனிஸ்ட் கட்சியின் மூலபலம் முறிகிறது என்பதை அதனுடைய அகில இந்தியத் தலைமை உணருவதும் இல்லை!

"மத்தியக் கமிட்டி அங்கத்தினர்களும், பொலிட்பீரோ அங்கத்தினர்கள்கூட கட்சியின் மத்திய பத்திரிகைகளான மாத இதழுக்கோ வார இதழுக்கோ அநேகமாக எழுதுவது கிடையாது. அல்லது பிரசுரங்கள் எழுதுவதற்கும் ஒப்புக்கொள்வதில்லை. இதேமாதிரிதான் மாகாணப் பத்திரிகைகள் சம்பந்தமாக மாகாணக் கமிட்டிகள் கடைப்பிடித்து வரும் போக்கும் இருந்து வருகிறது. கட்சித் தாள்களை பிரசுரிக்கும் கடமையில்-வாய்க்கு வந்ததையெல்லாம் அளந்துவிடுவதிலும் தானாக எல்லாம் புரிந்துவிடும் என்று நினைத்துவிடுகிறார்கள். இயக்கத்திற்குப் புரட்சிகரமான அம்சங்களைச் சேர்ப்பது என்று நீளமாகப் பேசுவதெல்லாம், வெறும் பேச்சாகத்தான் நின்றுவிடுகிறது" கம்யூனிஸ்டுகளின் பத்திரிகைகளைப் பற்றி இந்தத் தீர்ப்பு நல்கியிருப்பவர் 'நியூஏஜ்' என்ற ஆங்கிலப் பத்திரிகையின் ஆசிரியர் தோழர் அஜாய்கோஷ்! 'ஜனசக்தி' ஆசிரியர்கள் கம்பனைப்பற்றியும் கம்யூனிஸ்ட் பிள்ளையார் கோவில் திறப்புவிழாக்களைப்பற்றியும் எழுதுவதைக் கொண்டுதான்-வாய்க்கு வந்ததையெல்லாம் அளந்துவிடுவதாகவும் நீளமாகப் பேசுவதாகவும் தெரிவித்திருக்கிறார். தமிழ்நாட்டில் ஏறத்தாழ பதினைந்து ஆண்டுகளுக்கு முன்புதான் கம்பன் காவியம் காமக் களஞ்சியம், கல்விக்குப் பதிலாகக் கலவியைப்பற்றிப் பேசுவது - அதனைப் படித்தால் புகழ்ந்தால் புண்ணியம் கிடைக்கும்

திருப்புத்தூர் ஊராட்சிமன்றத் தேர்தல்

கழகத் தோழர்களின் வெற்றி முரசு

இராமனுதபுரம் மாவட்ட திருப்புத்தூர் ஊராட்சி மன்றத் தேர்தல் 22-7-58ம் தேதி நடைபெற்றது. கழகத் தோழர் செ. பொன்னையா, வை. கணபதி. தெய்வசிகாமணி, முகமது-மீரா ஆகியோர் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்றார்கள்.

மன்னன் ஜாரை எதிர்த்தார்கள் அவர்கள்; கண்ணனைக் கடவுள் என்கிறார்கள் இவர்கள்!

என்ற பெருமை கூறுவதும் பேதமை என்று திராவிட இயக்கத்தின் சார்பில் நாடும் ஏடும் கம்பன் காவியம் எரிக்கப்பட வேண்டும், திராவிடப் பண்பினர் ஏற்றுக்கொள்ளக்கூடாதென்று விளக்கப்பட்டது! கணை தொடுத்த கம்பதாசர்களில் கதிரேசர்களும் காவியப் புலவர்களும் எதிர்த்து நின்றனர். புறங்காட்டி ஓடினர். அறிஞர் அண்ணா அவர்களின் 'கம்ப ரசம்' நாடெங்கும் நடமாடியது. புலவர்களும் பாவலர்களும் பதறினரே தவிர மறுப்புக் கூறவில்லை. ஆர். பி. சேதுவும்-சோமசுந்தர பாரதியாரும்-அண்ணா அவர்களுடன் இராமாயணம் எரிக்கப்பட வேண்டுமா, வேண்டாமா, என்ற விவாதப் போட்டியில் கலந்து கொண்டு-அண்ணாவின் வினாக்களுக்கு விடையும் விளக்கமும் தராமல் விலகிக்கொண்டனர். ஆனால் கம்யூனிஸ்ட் ஜீவானந்தங்களும்-சிவஞானங்களும்- கம்பனை எரிக்க வேண்டுமென்று சொல்பவர்கள் பலஹீனமான இடத்திலேயிருக்கிறார்கள் என்று-ஏதோ-அண்ணாவின் குற்றச்சாட்டுகளையெல்லாம் மறுத்துவிட்டவர்களைப்போல் பேசுகிறார்கள். அண்ணா 1942-43ல் கட்டுரைகளை எழுதினார். 47-48ல் அவைகள் 'கம்பரசம்' புத்தகங்களாயின-அதன் பிறகு பல பதிப்புகள் வெளி வந்துவிட்டன. ஆனால் கம்யூனிஸ்டு கம்பதாசர்கள் இன்று வரையிலும் அவைகளை எதுவும் தவறென்று காட்டமுடியவில்லை. கார்க்கியின் கதைகளையும் கருத்துக்களையும் கண்டு களித்துள்ள கம்யூனிஸ்டுகள் கம்பனின் காலடியில் காணிக்கை செலுத்துவதற்குக் காரணம் என்ன?

இதிகாச புராணங்களைப் பற்றி-கம்பராமாயணத்தைப் பற்றி காரல் மார்க்ஸ் கண்ணோட்டத்துடன் கவனித்தால் - கம்யூனிஸ்டுகள் கட்டாயம் அந்தப் புளுகுமூட்டைகளைக் கண்டிக்க வேண்டும். அப்படி முனைந்துவிட்டால்- புராணங்களின் அடிப்படைகளைத் தகர்க்கத் தயாராக வேண்டும். திருவிழாப் புரட்டுகளை எதிர்க்கவேண்டும். அந்தக் காரியத்தில் கவனம் செலுத்தினால் கம்யூனிஸ்டுகள் - கையிலே செங்கொடியேந்திக்கொண்டு-மதுரை மாரியம்மன் தெப்பக்குளத் திருவிழாக் கும்பலில் உண்டியல் குலுக்கமுடியாதல்லவா? சீதாதேவியை இராமனே சந்தேகப்பட்டான். அறிவியக்கத்தார் கம்பனது காவியங்களைச் சோதித்து பார்க்க விரும்பினார்கள்-இராமபக்தர்களுக்கு இல்லாத - இருக்கவேண்டிய கவலை - தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்டுகளில்- அதுவும் இரண்டே இரண்டு பேருக்குத்தான் இருக்கிறது. அவர்களுடைய சிறப்புச் சொற்பொழிவுகளே கம்பனும் - மற்றவர்களும் தான்! எந்தக் கூட்டத்திலாவது எரிக்கப்படக் கூடாதென்பதற்குக் காரணம் காட்டியதுண்டா? இல்லை! கம்பன், காவியத்தில் தமிழ்ப்பண்பைக் குழைத்தும் இழைத்தும் தந்துள்ளான் என்று ஆவேசம் கலந்த குரலில் பேசுவதைக் கேட்டிருக்கிறேன். கம்பன் உழவனைப் பற்றிப் பாடியிருக்கிறான்; எனவே அவன் பாட்டாளியின் தோழன்! மார்க்சிம் கார்க்கி தன்னுடைய கதைகளில் ரஷியநாட்டு ஜார் மன்னர்களைப் பற்றி விவரித்திருக்கிறான். ரஷ்புடீன்கள் போன்ற மதவாதிகள் மங்கையருடனும் மதுக்கோப்பைகளுடனும் கும்மாளம் போட்டுத் தள்ளாடியதையும் உடனிருந்து அனுபவித்தவன் போல் எழுதியிருக்கிறான். தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்டுகளின் அகராதிப்படியும் கணிப்புப்படியும் கார்க்கியை ஜார்மன்னர்களின் கையாள் என்று கூறிவிடமுடியும்! கம்பன் உழவனைப்பற்றிப் பாடினான். அதே சமயத்தில் படகுப் பயணத்திலேயிருந்த பாவையரின் மெல்லிய ஆடைகள் நனைந்து அமோகமான புனல் விளையாட்டுப் படலங்களையும் படித்துப் பரவசப்பட்டுள்ளான். கம்பனைப் பின்தொடர்ந்து செல்லும் கம்யூனிஸ்டுகள் தங்களது தலைமைப் பீடத்திலேயிருந்தும். கட்சியின் மூலக்கொள்கைகளின் தன்மையிலிருந்தும் எவ்வளவு தூரம் விலகிப்போகிறார்கள் என்ற விபரீதமான உண்மையை இனியாவது உணரவேண்டும்! ஜீவானந்தங்கள் போல எல்லோரும் கம்பன் காவியத்தை கலை உணர்வுக்காகவும் கவிதை நயத்துக்காகவும் படிக்கவில்லை. எண்ணற்ற கம்யூனிஸ்டுகள்-வேலை நிறுத்தப் போராட்டம் தெரிந்தவர்கள்-இராமனை ஆண்டவனாகக் கருதி அடிபணிந்து தவங்கிடக்கிறார்கள்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு, கலை, இலக்கியம் பற்றிச் சரியான முடிவு இல்லாத காரணத்தினால் தான் ஆளுக்கொரு பாதையில் சென்றுகொண்டுள்ளார்கள். கேரளத்தின் முதலமைச்சர் சங்கரன், கவிஞர் வள்ளத்தோல் அவர்களின் கவிதைப் பெருக்கிலே இதயத்தைப் பறிகொடுத்துவிட்டார்- போற்றி போற்றியென்று களிப்படைந்தார்! கேரளக் கம்யூனிஸ்டுகளுக்கு கம்பனும் காகுத்தனும் கதாநாயகர்கள்! இவர்களுடைய கட்சியின் கொள்கைகளுக்கு எல்லா வகையிலும் அவர்களே சொல்வதுபோல் எல்லா மட்டத்திலும் கட்டத்திலும் முரண்பாடுகளிலேதான் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்! புரட்சிபேசுவதும்-புதுமை பேசுவதும்-பாரதியாரைப் பாடுவதும் பக்தப் பெருமைகளை நாடுவதும் 'பாரதப்பண்பு' என்று எக்களிப்பதும் வடநாட்டிலேயிருக்கிற கம்யூனிஸ்டுகளுக்கு கசப்பான செய்தியாகும். வரலாற்றுப் பெருமை மிக்க போராட்டச் சிறப்புகளைப் பெற்றுள்ள புரட்சிக் காவியங்களை கம்யூனிஸ்டுகள் அறிந்துள்ளார்கள். ஆனால் கம்பனது கற்பனைகளையும் கவைக்குதவாக் கருத்துக்களையும் அவன் காட்டியுள்ள காட்சிகளையும் நம்புகிறார்கள். "இராவண வதம் நிறைவு பெற்றுவிட்டது. வில்லின் செல்வனான தயரதகுமாரன் அளித்த விருந்தினைப் பருந்தும் கழுகும் பேயும் பசிப்பிணி தீரப் புசித்துக் களிக்கின்றன. இராமனையும் சீதையையும் தரிசிப்பதற்கு அமரரும் முனிவரும் பிறரும் திரள் திரளாகக் கூடியிருக்கின்றனர்"-லெனின் போராட்டங்களையும்-ஸ்டாலின் சொன்ன புதுக் கருத்துக்களையும் எடுத்தெடுத்துச் சொல்லுகின்ற கம்யூனிஸ்டுகள் இந்தியக் கம்யூனிஸ்டுகளல்ல, தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்டுகள்-இராமனையும் சீதையையும் தரிசிக்கிறார்கள்! "அதோ அரக்கரும் குரக்கரும் ஓடோடி வருகின்றனர். அவர்களிடையே மதிமண்டலத்தை ஒத்த விமானம் ஒன்று விரைந்து வருகிறது. அமரரும் முனிவரும் தேவரும் தேவமாதரும் முனிவர் பத்தினிகளும் விமானத்தை நெருங்கிச் சூழ்கின்றனர். தேவமாதர் நடுவில் சர்வாலங்கார சுந்தரியாகச் சானகி வீற்றிருக்கிறாள்" உலகத்தின் பெரும் பகுதியில் கம்யூனிசப் பாதையும் தத்துவங்களும் பெருக்கெடுத்துப் பரவுகின்றன என்று மகிழ்வடைகின்ற கம்யூனிஸ்டுகள் இருக்கிறார்கள். ஆனால் மேலே சொன்னபடி விமானத்தில் தேவமாதர்களையும் சுந்தரிகளையும்-நடுவில் சானகியையும் தரிசித்தவரும் ஒரு கம்யூனிஸ்டுதான் - எஸ். இராமகிருஷ்ணன் என்பவர் 'கம்பன் காவியத்தில் ஒரு காட்சி' என்று 1958 'ஜனசக்தி' மே தின மலரில் எழுதியிருக்கிறார்! அரக்கரும் குரக்கரும்-தேவமாதர்கள்-பத்தினிகள்- கட்டுரையாளர் காட்டுகிறார்-கம்யூனிஸ்ட் ஜீவானந்தம்-ஆசிரியர்-அவர் இந்தக் காட்சியின் கவர்ச்சிக்கு காரல்மார்க்சின் 'மூலதனம்' என்ற புத்தகத்தின் ஆதாரம் இருக்கிறது என்று சொல்லிவிடமுடியுமா?

கம்பனைக் கண்டு களிப்பவர்கள் கம்யூனிஸ்டுகள் - கவலையில்லை நமக்கு-ஆனால் கம்யூனிசத் தத்துவங்களுக்கு அந்தக் காவியத்திலே கருத்துக்கள் உள்ளனவா-சூடான-ஆவேசமான அரசியல் விளைவுகளிலே பணிபுரியும் கம்யூனிஸ்டுகளுக்கு கம்பனது படைப்புக்களும் பண்புகளும் பயன்தர முடியுமா? பகுத்தறிவுப் பாதையினின்றும் புதுப்பாதை பெறுகின்ற இந்தப் பெம்மான்கள்-'இன்றைய இந்தியா' எழுதிக் காட்டுபவர்கள் - ரஜனிபாமிதத்-ஹாரிபாலிட் - போன்ற கம்யூனிஸ்ட் தலைவர்களிடத்தில் கம்பன் பெருமையைச் சொன்னதுண்டா? "மனையாளை மாற்றான் கவர, மாறு செய்ய இயலாதவனாக இருந்தேன் என்றவன் பழியிலிருந்து என் புகழை மீட்கவே இலங்கை வந்தேன். உன்னை மீட்பதற்கல்ல என்று இராமன் சீதையிடம் பேசினான். ஈகை என்ற அறத்தைத் துறந்த அரசனது புகழ் அழிவதைப்போல் பெண்குலத்தின் பெருங்குணங்கள் எல்லாம் சீதை பிறந்ததால் ஒழிந்து விட்டதாகக் கூறுகிறான் இராமன்" இதுவும் 'ஜனசக்தி' தருகின்ற காட்சி! மனைவியை இழந்தான் ஒரு மன்னன்--பழிவாங்க விரும்பியவன் பறித்துச் சென்றுவிட்டான். கானகத்திலே கதறியழுது துடித்த காகுத்தனைக் கம்பன் காப்பாற்றினான்-கடவுளாக்கினான்-கம்யூனிஸ்டுகள்-பெண் குலத்தின் பெருமையை-சீதையை வைத்துக் கணக்குப் போடுபவர்கள் மார்க்சும்-ஏங்கல்சும் தந்த கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கைக்கு ஆதாரமாக வைத்துக் கொண்டு பிரச்சாரம் செய்வது சரியா? இல்லையெனில் இந்தப் படப் பிடிப்பு-கம்பன் காவியக் காட்சிகளும் நிகழ்ச்சிகளும் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமையான அமைப்புக்கு உடன்பாடானதா? ஆமென்றால்-அமிர்தசரஸ் வகுத்த வழியில் மார்க்ஸ் லெனின் வழியில் கம்பன் காட்டும் காவிய வழியும் உண்டு என்று அஜய்கோஷ் அறிவித்திருக்கவேண்டும்! இல்லையென்றால் லெனின் வழிதான்-ஸ்டாலின் பாதைதான் குருசேவின் குறுக்கு வழிதான் சிறந்ததென்றால் - கம்யூனிஸ்டுக் கம்பதாசர்கள் தயவுசெய்து-ராமாயணத்தைக் கைவிட வேண்டும்!

—கூடலரசன்.



இலக்கிய ஊஞ்சல்

வனப்பெல்லாம் தனக்கென ஆக்கப் பெற்றுப் பரந்து உயர்ந்து விளங்கும் மாளிகை. ஒரு புறத்தே உயர்ந்த விதானம். மறுபுறத்தே மாண்புள்ள மலர்க் கொடிகள். ஆங்கு நான்கு புறத்தேயும் நன்கு காணவல்லவாறு அமைக்கப் பெற்ற கனகமணிக் கட்டில். கட்டிலின் உள்ளே தங்கத்தை ஒத்த அங்கத்தைப் பெற்ற குழந்தை தூங்கத் தொடங்கும் நிலையில்! தேன்மொழி கலந்து தீந்தமிழ் இசை எழுப்பிய வண்ணம் ஏந்திழை ஒருத்தி எதிர் நிற்கின்றாள். இவற்றை நாம் செயற்கையால் செய்தமைத்துச் சிந்தை மகிழும் நிலை படைத்துள்ளோம்.

இத்தகைய எண்ணிறந்த காட்சிகளைக் கனவுலகில் காணுகின்ற கவிஞருலகுஇயற்கையன்னை துணை கொண்டு இயலுகின்ற நிலையை ஈண்டு காண்போம்.

காலை நேரம்-அது ஒரு குளிர்ந்த சோலை-மிக விரிந்த காவினிலே ஒரு பரந்த பொய்கை. பரந்த பொய்கையிலே விரிந்து படர்ந்து நீக்கமற விளங்கும் தாமரைக் கொடி. அங்குமிங்கும் அலை மோதும் ஒலி அமைதியைக் காட்டிற்று. காலை வேளையில் கதிரவன் நுழைவினைக் கதிர்கள் காட்டிற்று; கதிரவனைக் கண்டவுடன் கமலங்கள் கண் திறக்கலுற்றன.

எங்கும் பசுமை நிறம் படர்ந்ததைப்போன்று தாமரை இலைகள் தடாகத்தை மறைத்தது. இடையிடையே சாம்பல் நிறமுள்ள மொக்குகள் தலை நிமிர்ந்தவண்ணம் தலையாட்டிக்கொண்டிருந்தன. பொய்கையின் நடுவில் பொலிவு மிக்க மலர் ஒன்று பொதியவிழ்ந்திருந்தது. கதிரவனின் கடுமைமிக்க கதிர்களைக் கண்டவுடனே தடாகத்துத் தாமரை மலர்கள் கதவினைத் திறக்கும் போலும்;

கொழுவிய தாமரை மலர்-செக்கச் சிவந்த கமலத்தில் சேர்த்தமைக்கப்பட்ட செழுஞ்சுவைத் தேன் நிரம்பிய மலர் தேனுண்டு மகிழும் வண்டுகள் திரிந்துகொண்டிருந்தன. எங்கு நோக்கினும் பச்சை நிறம் இடையிடையே செந்நிறமும் சிந்திக் கிடந்தது. சிற்சில வேளையில் செந்நிறத்தோடு கருமையும் கலந்து மறையும். வண்டுக்கூட்டம் தேனுண்ண வரும் காட்சிதான் அது.

ஆங்கு செழித்து விளங்கிய செந்தாமரை மலரினை நாடி வண்டு ஒன்று வட்டமிட்டு வந்தது. வட்டமிடும் வண்டு அந்தக் கொழுவிய தேனை குடிப்பதற்கு நுழைந்தது. உட்சென்ற வண்டினைக் காணுதற்கு இயலவில்லை.

பொய்கையில் மலர்ந்த மலரில் தேன் உண்டு, அதனை வட்டமிடும் வண்டு உண்டு. இந்தக் காட்சி பொய்கையின் மேலே! அதே போல் பொய்கையின் கீழ்கெண்டை மீனுக்கு வட்டமிடும் நண்டுகள் சுற்றிச் சுழலுகின்றன. இந்தக் கொழுவிய தாமரை மலரின் தண்டு, நல்ல ஒரு கொழுவிய வாளை மீன் போலும் என எண்ணிற்று நண்டு. அந்த வாளை மீனைக் கடித்துச் சுவைக்க எண்ணிய நண்டு தாமரைத் தண்டினைக் கடித்துத் துண்டாக்கியது. செழுமைமிக்க சிவந்த தாமரை மலருக்கும், கொழுவிய தாமரைக் கொடியினுக்கும் இடையில் இருந்த உறவு துண்டிக்கப்பட்டது. நண்டு தன் செயலுக்கு வெட்கித் தாமரைத் தண்டு எனக் கண்டு தண்ணீரினுள்ளேயே தலைகாட்டாது மறைந்தது.

அழகிய தாமரை-அன்றலர்ந்தது; அதிலே கரிய நிற வண்டு கதுப்பு மிக்க தேனை உண்டவண்ணம் மகிழ்ந்திருந்தது. மதுவினை மிக்கு உண்ட வண்டு மயக்குற்றிருந்தது. இடையிலே தாமரை மலரையும், மலரின் கொடியையும் நண்டு துண்டிக்க, மலருக்கும் கொடிக்கும் உள்ள கட்டுப்பாடு தளர்ந்தது. காற்று நன்கு வீசத் தொடங்கிற்று. கொடியின் கட்டுப்பாடு அவிழ்ந்த காரணத்தால் தாமரை மலர் அங்குமிங்கும் அசையத் தொடங்கிற்று. அதனுடைய அசைவு மேலும்கீழும் உயர்ந்து தாழ்ந்து மலரினை அசைக்கத் தொடங்கிற்று. மலரினுள்ளே மதுவுண்ட மயக்கத்தில் பொன் நிறப் பூந்தாது ஒட்டப் பெற்ற கரிய நிற வண்டு அங்குமிங்கும் அசையும் மலரிலே தொட்டில்போலத் தென்றலால் ஆட்டப் பெற்று அமைதியாய்த் தூங்கிக்கொண்டிருக்கிறதாம்.

இதனைக் கவிஞர் கண்டார். நண்டால் துண்டாடப்பெற்ற தாமரை மலர் அழகிய தொட்டிலாகவும், அதிலே மதுவுண்ட வண்டு மயங்கியமை குழந்தையின் துயில் நிலையாகவும், காலைத்தென்றல் இனிய தாலாட்டுப் பாடும் கன்னிபோலவும் கண்டு மகிழ்ந்து பிறரையும் மகிழச் செய்யும் பான்மை போற்றக் கூடியது. எவ்வளவு அழகான கவிதை!

"மனங்கேழ் வனசம்
ஊற்றெடுத்து
மதுவார் பொகுட்டுச்
சுருச் சுமந்து

வயிறு வருந்திக் கருவுயிர்க்க
வயின்பார்த் துழலும்
பெடைஞெண்டைக்
கணங்கே முயின்முள்
தாட்படுத்துக்
கவைத்தாள் இடையூற் றலையூடு
கருவண் டினங்கள்
புடைசூழக்
கலந்து முரலத் துவக்குண்டு
சுணங்கேர் முலைப்பெண்
அணங்குநினைச்
சுமந்து மகளிர் தாலெடுப்பத்
துயிலு மணித்தொட்
டிலைக் காட்டுந்
தொடுநீர் வாவித்
திருக்குளந்தைப்
பணங்கேழ் அரவப் பேரல்குற்
பரையே தாலோ தாலேலோ
......................................"

(அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ்.)

கேழ்வனசம்-செந்தாமரை.
வயின்-இடம்.
பெடைஞெண்டு-பெண் நண்டு.
கேழ்-நிறம்.
கவை-பிளவு.
துவக்குண்டு-பிணிப்புண்டு.

—கதிரவன்,
பி. ஏ. (ஆனர்ஸ்.)

பிலிம் நெருக்கடி-
எம். ஜி. ஆர். எச்சரிக்கை

1958-ம் வருடம் ஜூலை 18-ந் தேதி வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெற்ற தென்னிந்திய நடிகர் சங்க பொதுக் கூட்டத்தில் சங்கத் தலைவர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள் தலைமை வகித்துப் பேசுகையில், தற்போதைய கச்சாபிலிம் கட்டுப்பாட்டினால் சினிமாத் தொழிலில் நிலவும் நெருக்கடி நிலையையும் அதனால் சம்மந்தப்பட்ட நடிக நடிகையர்கள், மற்றும் மேற்படி தொழில் சம்மந்தப்பட்ட அனைவருடைய அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதையும், இது சம்மந்தமாய் மத்திய, மாகாண சர்க்கார்களின் பராமுகமான போக்கையும், கச்சாபிலிம் கட்டுப்பாட்டினால் "தென்னாடுதான்" அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதென்பதையும் விளக்கமாய் எடுத்துக் கூறி, உடனடியாக கச்சாபிலிம் கட்டுப்பாட்டை ரத்து செய்தால் தான நெருக்கடியை தவிர்க்க முடியுமென்றார்.

கச்சாபிலிம் கட்டுப்பாடு காரணமாக நடிக நடிகைகள் பாதிக்கப் பட்டிருப்பதையும், சினிமாத் தொழிலில், தற்போதைய நெருக்கடி நிலையைப் போக்க, கச்சாபிலிம் கட்டுப்பாட்டை உடனடியாக நீக்க வேண்டுமாய் மத்திய அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டும், இதற்கு சென்னை அரசாங்கமும் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், அதற்காக சென்னை சர்க்காரை நேரில் கண்டு பேச திருவாளர்கள் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள் (தலைமையில்) சிவாஜி கணேசன், திருமதி என். எஸ். கே. மதுரம், திரு கே. சுப்பிரமணியம், எஸ். டி. சுந்தரம், பி. டி. சம்பந்தம், டி. கே. ஷண்முகம், ஆர் எம். சோமசுந்தரம் (தென்னிந்திய நடிகர் சங்கத்தின் காரியதரிசி) ஆகியோர் அடங்கிய "தூதுக்குழு" ஒன்றை அனுப்புவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

விரைவில் எதிர்பாருங்கள்!

கன்னித்தமிழ் ஏடு!
கருத்தொளிரும் மலர்க்காடு!
கற்பனையின் நீரூற்று!

"அன்னை"

திங்கள் ஒருமுறை! உங்கள் கரங்கட்கு வருமுறை!
"வாள் தருவாள், வேல் தருவாள், வேகத்திற்குயிர் தருவாள்
தாள்பணியாள், தலைகுனியாள், தமிழ்காப்பாள் நம் "அன்னை"

ஆசிரியர்:
டாக்டர். சத்தியவாணிமுத்து, M. L. A.

★

விபரங்கட்கு:
பொறுப்பாளர், "அன்னை"
179, போர்ச் சுகீஸ் சர்ச் தெரு,
சென்னை-1.

★

எங்கும் கிடைக்கும்.

வெண்பாப் போட்டி

22. 'தாய்' எனத் தொடங்கி 'சேய்' என முடித்தல்.

தாய்ஆகச் சென்றிட்டாள்; தாங்காது நெஞ்சந்தான்
ஓய்வின்றி எண்ணமிட்டு ஒண்டொடியைப்—போய்ப்பார்க்க
உந்திற்றே; ஓடினேன்; உள்ளே நுழையுமுனம்
சொந்தக் குரல்கொடுத்தான் சேய்!

—அர. கோவிந்தராசன், சிக்கருயபுரம்.

'தாய்'எங்கே! என்றிட்டு தூங்கா தழுததினுல்
காய்ந்திட்ட வெண்ணிலவைக் காட்டினேன்,—ஆயினுமோ,
ஓய்ந்திடா வண்ணம் ஒருவரையும் நாடாமல்
தாயேதான் தேவையென்ருன் சேய்.

—சா. ரிச்சர்ட் லீட், புதுக்கோட்டை.

தாய்பெற்ற செல்வம் தளர்ந்த நடையுடனே
நோய்பெற்று நொந்துருகும் மாதவளின்—காய்மார்பைப்
பற்றிச் சுவைத்தும் பசிநீங்கா ஏக்கத்தால்
சுற்றி வழிநோக்கும் சேய்.

—கோ. மாணிக்கம், சென்னை-23.

தாய்நாடு விட்டகன்ற தண்டமிழர் வாழ்விற்கே
வாய்விட்டுக் கேட்க வலுவின்றி—ஒய்வுற்ற
பாராளும் சோதியாம் பண்டிதரா பாரதத்தாய்
சீராகப் பெற்றெடுத்த சேய்?

—இல. அரவரசன், முகவை.

தாய்நாடு முன்னேறத் தன்னுயிரை ஈந்திடுவான்,
தாய்மொழியின் வாழ்வுக்குத் தான்வாழ்வான்—தியவர்கள்
வல்லார் எனினும் வணங்கான்; மொழிகாக்கச்
செல்வான் தமிழகத்துச் சேய்.

—சோ. கண்ணப்பன், பேரூர்.

தாயான என்மனைவி தள்ளிக் கதவடைத்துப்
பாய்விரிக்க யானும் படுக்குங்கால்—வாய்திறந்து
கூர்விழியில் நீராடக் கூவி அழுவதனுல்
சீருலகில் தொல்லையடா சேய்.

—க. தங்கவேலன், சேர்வைநகர்.

தாயைப் பழிப்பானை, தன்மொழியைப் போற்ருனை
வாய்மை நெறிதவறி வாழ்வானை—ஆய்கலைகள்
கல்லா திருப்பானைக் கண்டாலும் நீவிலகிச்
செல்லடா செல்லடா சேய்.

—குகன்குருசாமி, கமுதி.

தாய்மொழியாம் செந்தமிழைத் தள்ளிவிட்டு மற்றதொரு
சேய்மொழியைக் கற்றல் சிறப்பாமோ?—ஆயாள்தான்
சந்ததமும் சீராட்டிக் காத்தாலும் தன் தாயின்
சிந்தை மறக்குமோ சேய்?

—ந. இராமசாமி, சித்தையன்கோட்டை.

தாய்மையே வாழ்வு தரவல்ல தென்றுணர்ந்தேன்,
பாய்ந்துவரும் காவிரிபோல் பண்புளத்தால்—தூய்மைசேர்
பேர்கொள்ளும் தாயின் புகழ்கூறி நாணுவேன்
சீர் கொள்ளும் செந்தமிழ்ச் சேய்.

—மு. சாந்தம், மதுரை.

தாய்நாட்டு மண்ணும் தமிழ்மண்ணை முத்தமிடும்
வாய்ப்பின்றி சிங்களத்தில் மாள்கின்ருேம்—ஓய்தமிழா!
எங்கள் துயர்களையும் எண்ணமிலா நீதானே
சங்கத் தமிழீந்த சேய்?

—ந. அலி, துறையூர்.

தாய்நாடு காப்பதற்கு தன்குடும்ப வீரரெல்லாம்
போய்மாளக் கேட்டறிந்தாள்; பொங்கினுள்;—காய்ந்தெழுந்து
பள்ளிக்கே சென்ருனைப் பற்றிவந்து ஈட்டிதந்து
செல்லென்ருள்; சென்ருன் அச் சேய்.

—சி. தனலன், தச்சம்பத்து.

தாய்மைத் தனிமுதலாம் தண்ணளியாம் இன்சுவையாம்
வாய்மைத் தமிழ்யாண்டும் வாழ்கவே—ஆய்மதியாய்
முந்தி உதித்தமொழி மூவேந்தர் காத்தமொழி
செந்தமிழ்க் கெம்மொழியுஞ் சேய்.

—மு. முகம்மது அலி, காரைக்கால்.

தாய்மாமன் பெற்றெடுத்த தையலே! நம்மக்கள்
காய்கின்ருர் பட்டினியால்; கஷ்டங்கள்—ஓய்ந்தனவோ?
சாந்தனையும் துன்பமே; சம்பத் திலாநமக்கு
ஏனோதான் இத்தனை சேய்?

—இராம. செல்வநாயகம், சித்தையன்கோட்டை.

தாய்உள்ளம் புண்படவே; தாரத்தைப் பின்தொடர்ந்து,
போய்விட்டால் ஊரார் புகழ்வரோ?—ஓயாமல்
தூய தமிழ்மகனே தூற்றிடுவார்; எண்ணிப்பார்;
தாயவட்கு நீதானே சேய்!

—முத்தூரான், பொள்ளாச்சி.

தாய்த்தமிழைக் காப்பதற்குத் தண்டமிழர் ஈழமதில்
காய்ந்தெழுந்த காட்சிதனைக் கண்டபினும்,—ஆய்தொடியே
இந்திதனை இங்கேற்ற எண்ணுவோன் உண்மையாய்
சிந்தனையில் நல்லறிவில் சேய்.

—ந. ஜாபர், சித்தயன்கோட்டை.

தாய்போன்ற தெய்வம் தரணியில்தான் வேறுண்டோ
பேயென்று பேசுகின்ற பித்தரது—வாய்கிழிப்பான்!
வெல்ல மொழிகாப்பான் வேண்டும் புகழ்சேர்ப்பான்
செல்லமாய் நீவளர்க்கும் சேய்.

—இறைவன், புதுவை.

தாய்போல் உலகெல்லாம் தாங்கும் குணங்கொண்டே,
பேயாய் நமைவாட்டும் பேதங்கள்-மாய்ந்தொழிய
இன்னல் பலதுய்த்தும் ஏற்ற முறுவோனே
தென்னகத்துச் சீர்காக்கும் சேய்!

—செல்வம், சென்னை.

தாய்த்தமிழே! தண்ணொளியே! தார்வேந்தர் தம்புலவர்,
துய்த்திட்ட இன்னமுதே! திஞ்சுவையே!—மாய்க்கின்ருர்
மந்தமதி இந்திக்கு வாழ்த்தளித்தே; மாளவவர்
செந்தியே கொண்டானுன் சேய்.

—மு. கோவிந்தராசன், ஆம்பூர்.

தாயாம் நமதருமைத் தண்டமிழின் பொன்னுடலைப்
போயழிக்கத் தூண்டும் வடநாட்டு—நாய்களையே,
கொன்று குவியாமல் கும்பிட்டு வாழ்பவனே
தென்னுடு பெற்றெடுத்த சேய்?

—அ. லெ. சுப்பிரமணியன், புளியங்குளம்.

தாயோ சடைமுடியள்; தந்தையோ பேர்சொறியன்;
வாயெல்லாம் பாலாய் வடிந்தொழுகும்;—ஆயுங்கால்
பெற்ருேரைப் போலாது பேணி மகிழ்ந்துண்ண
வற்புறுத்தும் கற்கண்டாம் சேய்.

—சு. கந்தசாமி, கருப்பட்டிபாளையம்.

விடை: பலாப்பழம்.

தயாராகிறது!
முல்லை
(ஆகஸ்ட் இதழ்)
விலை அணு எட்டு.

ராஜா பார்லி
பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்
PRO: R. சங்குபிள்ளை, 115, திண்டுக்கல்ரோடு, மதுரை.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சு. அருணுசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு